ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௭. பிரமோதூத௵ ஆடி-மீ பகுதி ௭.

Vol 7. July & August 1930. **No. 7.**

ஸாது கோஷ்டி.

அறிவிற்சிறந்த பெரியார்கள் பெருவாழ்வென்றும், அதற்கு எதிர்த்தட்டான அற்பவாழ்வென்றும், வாழ்வினை இருபகுதியாகப் பிரித்துரைப்பார்கள். இவ்வுலகினில் சரீர ஆரோக்யம், பொருள் முதலியவற்றால் குறைவின்றிப் பெருமதிப்பாளராய் வாழ்பவரேனும் அவரது வாழ்வு அற்பவாழ்வேயாம். ஏனெனின் அவ்வாழ்வுக்கு அழிவுண்டாமாதலால் என்க. பரமாத்மாவின் சாமீப்யத்தையடைந்து வாழ்கின்ற வாழ்வே பெருவாழ்வென்ப. இவ்வாழ்வு எவ்வளவு சிறப்புடையார்க்கும் எளிதிற் கிடைப்பதரிது. ஸாது கோட்டியின் சம்பந்தமுடையார்க்கு இப்பெருவாழ்வு எளிதிற் சித்திக்கும். எவ்வாறெனின் ஸாதுக்களால் மதிக்கப்படுவரேல் அதனால் அவர்க்கு அதிகாரத்வபூர்த்தியுண்டாகி அதனால் அவர் பெருவாழ்வடைவர். எனவே ஸாதுக்களுடைய அங்கீகாரமே அதிகாரத்வ பூர்த்தியுண்டாவதற்கு ஹேதுவாயிருக்குமென்பதனை, "சாது கோட்டியுட்கொள்ளப்படுவரே" என்று பெரியாழ்வார் அருளிச் செய்தார். [ஸாது கோட்டி— ஸாதுக்களின் கூட்டம்.]

கண்ணபிரான் கீதையில் * ஆர்த்தன் § ஜிஜ்ஞாஸு ¶ அர்த்தார்த்தி ஞானி என்ற நால்வரும் என்னை யடைவார்கள். இவ

* ஆர்த்தன—பொருளைப் பெற விருப்புடையவன்.
§ ஜிஜ்ஞாஸு—அறியவேண்டுமென்ற இச்சையுடையவன்.
¶ அர்த்தார்த்தி—இழந்துபோன பொருளைப்பெற விருப்புடையான்.

களுள் ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு, அர்த்தார்த்தி என்ற மூவரும், என்னிடத்தில் பிறிதோர் பிரயோஜனத்தைப்பெற்று என்னைவிட்டு நீங்குவார்கள். ஞானி மாத்திரம் என்னையே உபாயோபேயமாகக் கருதி என்னைவிட்டகலாதிருப்பானாதலால் இவனே எனக்கு உயிர்நிலை யென்றருளினான். இதனால் பரமஸத்வநிஷ்டராய் ஞானபக்தி வைராக்யமுடையராய் ஸதாசார்யோபதேச வசப்பட்டவராய் ஒழுக்கத்தில் தலைசிறந்தவராய் இருப்பவர் எவரோ அவர்களே சாதுக்களாவாரகளென்பது பெறப்படும்.

* சாதுக்கள் எதை எதைத் தொடுகின்றார்களோ எதை எதைப் பார்க்கின்றார்களோ, அவையெல்லாம் ஸத்கதியடைகின்றன. இங்ஙனம் இவர்கட்கு மிகுந்த பெருமை இருக்கின்றதனால் "மெய்யடியார்கள் தம், ஈட்டங்கண்டிடக்கூடுமேல்அது காணுங்கண் பயனாவதே" என்றருளிச்செய்யப்பட்டது. கண்பயனாவதே யென்ற உபலக்ஷணத்தால் அவர்களுடைய குணங்களைப் பேசுவதும் அவரது புகழுரையைக் கேட்பதும் அவரோடிணங்கியிருப்பதும் வாய் முதலியவற்றின் பரமப்ரயோஜனமாமென்று கொள்ளத்தக்கது.

பரமேச்வரன் ஸாதுக்களை உயிர்நிலையாகக்கொண்டிருக்கின்றதனாலன்றோ இவர்கட்கிடுக்கணுண்டாம்போதெல்லாம் அதை யகற்றுதற்காக வந்தவதரிக்கிறான். மேலும், கண்ணபிரான் தூதாக எழுந்தருளிய காலத்தில் துர்யோதனன் கண்ணபிரானை நோக்கி, ஞானத்திற்சிறந்த பீஷ்மாசார்யரையும், ஜாதியிற்பெரிய துரோணாசார்யரையும், பொருள் முதலியவற்றில் மிக்க என்னையும்விட்டுச் சூத்திரன் வீட்டிற்சென்று உண்டனையே; இது தகுதியோவென்று

* "பிள்ளைலோகாசார்யர்: பெருமான் 'உம்மோடன்வயமுடையார்க்கெல்லாம் நம்வீடு கொடுக்கக் குறையில்லை' என்று திருவுள்ளமானபின்பு தாரஸ்த்தமான விருக்ஷங்களையெல்லாம கடாக்ஷிப்பது; ஆஸந்நமான (சமீபத்திலுள்ள) விருக்ஷங்களையெல்லாம் திருக்கைகளாலே ஸ்பர்சாதிகளை உண்டாக்குவது. இப்படி நித்ய ஸம்ஸாரிகட்கும் ஸ்ரீவைஷ்ணவர்கட்கும் தம்மோடே அந்வயமுண்டாம்படி செய்தருளினார்" என்று ப்ரஸித்தமிறே' என்று இவ் வரலாற்றை வியாக்யாதாக்கள் பலவிடங்களிலுக் குறிப்பிட்டுள்ளார்கள். இதனால் ஸாதுக்களின் ஸம்பந்தமுடையனவெல்லாம் உய்வடையுமென்பது தெளிவு.

வெறுத்துரைத்தான். அப்பொழுது கண்ணபிரான் அவனை நோக்கிப் பகைவருடைய வீட்டில் உண்பதும் உண்பிப்பதும் கூடாதன்றோ என்றான். அவ்வுரைகேட்ட துர்யோதனன் உனக்கும் பகைவருண்டோ என்று வினவினான். அதற்கு 'நீ பாண்டவர்கட்குப் பகைவனன்றோ' என்று விடையளித்தான். பாண்டவர்கட்கு யான் பகைவனானால் உனக்கதனால் வந்த குறையென்னை? என்றான். அதற்குப் பாண்டவர்கள் எனக்குயிரன்றோவென்று பாராட்டிக் கூறினான். இதனால் எம்பெருமான் ஸாதுக்களை உயிர்நிலையாகக் கருதினானென்பது வெளியாயிற்று.

இனி, ஸர்வேசுவரனும் ஸாது கோஷ்டியின் ஸம்பந்தத்தைத் தனக்குப் பிரயோஜனமாகக்கருதி விரும்பினானென்ப துரைக்கப் பெறும்.—

ஸர்வேசுவரன் இராமபிரானாக அவதரித்த காலத்தில் இராவணவத முதலிய காரியங்களெல்லாம் முடிந்தபின்னர் ஒருநாள் இராமபிரான் கானரஸமறியும் சிறந்த வித்வான்கள் முதலிய பெரியோர்கள் சூழ்ந்திருக்கப் பெருமதிப்புடன் சிங்காசனத்தில் எழுந்தருளியிருந்தனர். அப்பொழுது குசலவர்கள் ஸ்ரீராமாயணத்தைக் கானரூபமாகப் பாடத்தொடங்கினார்கள். கானமும் மிகவும் இனிமையாகவிருந்தது. அங்குக் குழுமியிருந்த வித்வத்கோஷ்டியினர் 'நாம் இதுவரையும் இத்தகைய கானத்தைக் கேட்டோமில்லையே; இது பேரின்பத்தைப் பயக்கின்றதே' என்று கானரஸ ஸாகரத்தில் மூழ்கிப் பரவசமுற்றனர்.

குசலவர்களின் கானத்திற்கு விஷயம் ஸ்ரீராமாயணமாயும், இவர்கள் கானவித்தை முதலியவனைத்தும் வால்மீகி பகவானிடத்திற் பயிலப்பெற்றவராயும், இராமபிரான் புதல்வர்களாயுமிருப்பரேல், இவர்கள் கானத்தில் எவர்தா மீடுபடாதிருப்பர்? இராமபிரானும் இதில் ஈடுபட்டு, 'நாம் கானஸாகரத்தில் மூழ்கியிருக்கும் குழாத்துடன் அளாவளாவியிருக்கவேண்டும்' இதற்குபாயமென்னை? என்று கருதலாயினர்.— 'இப்பொழுது சிங்காசனத்தைவிட்டெழுந்திருப்போமாகில் கோஷ்டிகலைந்து விடும்; இவ்வாசனத்திலிருப்பதற்கும் மனமிசையவில்லை; என்செய்வது' என்று சிங்கா

சனத்திலிருந்தபடியே சிறிதுசிறிதாக நகர்ந்துசென்று கோஷ்டியிற் கலந்து விடுவோம' என்று தீர்மானித்து அங்ஙனமே செய்தனர்.

இன்னும் "மின்னிடைமடவார்கள்" என்ற திருவாய்மொழியில் ஆழ்வார் நாயகி அவஸ்தையடைந்து பிரணய ரோஷத்தால் எம்பெருமானைநோக்கி "கழகமேறேல்" (எங்களுடையகோஷ்டியிற் புகவேண்டாம்) என்று தடுத்தபோது எம்பெருமான் அக்கோஷ்டியை விட்டகல்வதற்குத்திருவுள்ள மில்லாதவனாய் அக்கோஷ்டியிற் கூடியிருப்பதற்கு முயன்றான்; இவ்விடத்திற் பட்டாருளிச்செய்ததும் இங்கு ஆராயத்தக்கது. அதுவருமாறு.—

"சமஸ்தகல்யாணகுணாத்மகனாய், உபயவிபூதியுக்தனாய் ஸர்வாதிகனாய் ஸர்வநியந்தாவாயிருக்கிற ஸர்வேசுவரன் நாலிடைப்பெண்களிருந்தவிடத்தே புக்கல்லது நிற்க மாட்டாத செல்லாமை விளைய, அவர்கள் 'நீயிங்குப்புகாதேகொள்' என்ன, விலங்கிட்டாப்போலே பேரவும திரியவுமாட்டாதே தடுமாறிநின்றான்; என்கிற சௌசில்யம் தங்களையும் இவர்களையுமொழிய ஆராரிந்து கொண்டாட வியாஸாதிகள் எழுதியிட்டுவைத்துப் போனார்கள்" என்பதாம்.

ஒப்புயர்வற்ற ஸர்வேசுவரனும் ஸாதுகோஷ்டியின் ஸம்பந்தத்தைப்பெற விரும்புவனேல் ஸாதுக்களின் பெருமையை எடுத்துரைத்தற்கியலுமோ? மேலும இவர்கள் உபதேசத்தால் உலகம் நன்னிலையெய்தி உய்யும். இவர்களுடைய உபதேசம் எபபொழுது நடைபெறுகிறதில்லையோ அப்பொழுது உலகம் பலவகையான் அநர்த்தப்பட்டுப் பரிதபிக்கும், இதுபற்றியே * "சான்றோருமில்லை கொல் சான்றோருமில்லைகொல்" என்று சொல்லப்பட்டது. நிற்க;

* கண்ணகி, சிலம்பு விற்கச்சென்ற தன்னாயகன் ஆராய்ச்சியில்லாது அரசன் ஆணையிட அதனான் இறந்து பட்டானென்பதறிந்து அரசனிடத்து வழக்குரைக்கவருகின்றபோது "சான்றோருமில்லை கொல், சான்றோருமில்லை கொல்" என்று முறையிட்டாள். இவள் இங்ஙனம் முறையிட்டதன் கருத்தியாதெனின்; சான்றோர் இங்கிருப்பரேல் அவர் நல்லவுபதேசத்தால் எல்லோரையும் நலமுறச்செய்வர். அவர்களில்லாத காரணத்தானன்றோ இத்தகைய பொல்லாங்கு நேர்ந்ததென்பதாம். இதனான் ஸாதுக்களின் உபதேசம் உலகம் நன்னிலையடைதற்குக் காரணமாகுமென்பது தேற்றம்.

லோகதேசிகன் “இவர்களோட்டை ஸம்பந்தம் வேதகப்பொன் போலே” என்றருளிச்செய்ததாதலால பொருளல்லாதவையும் இவர்கள் ஸம்பந்தத்தால பொருளாகும். ஆதலால் எப்படியிருந்தால் அவர்களுடைய ஸம்பந்தங் கிடைக்குமோ அப்படியிருந்து அவர்கள் ஸம்பந்தத்தைப் பெறுவோமாகில் நமக்கு ஸர்வேசுவரன் ஸாமீப்யத்தையடைதற்குரிய அதிகாரத்வபூர்த்தியுண்டாகிப பெருவாழ்வடைவோம்.

ப. அ.

ஸ்ரீ:

நம்பிள்ளை வைபவம்.

(139-ம் பக்கத்தொடர்ச்சி)

நம்பிள்ளைக்கு நஞ்சீயரருளிய ரஹஸ்யங்கள்.

(1) ஒருகால நம்பிள்ளை நஞ்சீயரை நோக்கி, ஒருவன் தனக்கு ஸ்ரீவைஷ்ணவத்வம் உண்டென்றறிவது எங்ஙனேயிருந்தால் என்று பணிவுடன் வினவினர். அதற்கு ஜீயரும் - ஆச்சாவ

---

* அர்ச்சையாவது அடியார்கள் தாமுகந்த பொருள்களால் தாம் விரும்பியவாறு அமைத்துக்கொண்ட விக்ரஹத்தைத் தாம் விரும்பியவாறே திருநாமஞ்சாற்றி அவ்வவ்வாகம முறைப்படி பிரதிஷ்டை செய்து ஆராதனைக்கான உபகரணங்களால் ஆராதிக்க, அவ்விக்ரஹத்தில் ஸர்வேசுவரன் அடியார்கள் வசப்பட்டவனாய் அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்திற்பண்ணும் விருப்பத்தைப்பண்ணி, அவர்கள் படைத்த அப்பொருள்களைத் திருவுள்ளம் பற்றி அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி அடியார்க்கெளியனாய்த் தன்மையை வெளியிட்டுக்கொண்டிருக்குமிருப்பு. அது — ஸ்வயம் வ்யக்தம், தைவம், ஸைத்தம், மானுஷம் என நான்கு வகைப்படும். அவற்றுள் ஸ்வயம் வ்யக்தமாவது — ஒருவர் பிரதிஷ்டியாமலே தாமே தோன்றியனவாகப் புராணங்களாலே பிரஸித்தமான கோயில் திருமலை முதலிய திவ்யதேசங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள். (2) தைவமாவது — பிரமன் முதலிய தேவர்களால் பிரதிஷ்டை செய்விக்கப்பட்டுக் காஞ்சி முதலிய திவ்யதேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள். (3) ஸைத்தமாவது — தவத்தால் ஸித்தியடைந்த ரிஷிகள் முதலியோர்களால் பிரதிஷ்டிக்கப்பட்டுத் திருவல்லிக்கேணி முதலிய திவ்யதேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்

தாரத்துக்குப் பரத்வமுண்டென்றறிந்தவளவிலும் ஒரு ஸ்ரீவைஷ்

பெருமான்கள். (4) மானுஷமாவது.— பின்புள்ளோரால் ப்ரதிஷ்டிக்க பட்டுக் கிராமங்களிலும், கிருஹங்களிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள்.

அர்ச்சாவதார எம்பெருமான் விக்ரஹரூபியாதலாலும், தன் சக்தியை மாற்றிக்கொண்டு வழிபடுவோர் வசப்பட்டவனாய்க் காண்கையாலும், அதிற் பரத்வபுத்தியுண்டாவதரிதாம். இதுபற்றியே ஆழ்வாரும் அர்ச்சாவதாரத்தின் எளிமையைத் தெரிவிக்கின்ற "செய்யதாமரைக்கண்ணனாய்" என்னும் திருவாய்மொழியில் "அவனிவனென்று கூழேன்மின், நெஞ்சினால் நினைப்பான்யவன் அவனாகும் நீள்கடல்வண்ணனே" என்று அருளிச்செய்துள்ளார். (இதன் பொருள்.— "அவனாகிறான்-தேசகால வஸ்துக்களால் அபரிச்சின்னனாய் அஸாதாரண விக்ரஹத்தோடே நித்யஸூரிகளுக்கு அனுபாவ்யனாய்க் கொண்டிருக்கிறானொருவன்; இவனாகிறான்-தேசகால வஸ்துக்களாற் பிற்பட்டு நாமுகந்ததொரு திரவ்யத்தைத் தனக்குத் திருமேனியாகக்கொண்டு இவ்வழியாலே நம் புத்தி அதீனனாயிருப்பானொருவன். ஆனபின்பு அவன் அபரிச்சின்னன். இவன் பரிச்சின்னனென்றிங்ஙனே சம்சயாக்ராந்தராகாதே கொள்ளுங்கோள். மனசாலே யாதொன்றைத் திருமேனியாகக் கோலினீகோள் அத்தையே அபரிச்சேத்ய மஹிமனான சர்வேச்வரன் தனக்கஸாதாரண விக்ரஹமாகக்கொண்டு விரும்பும்" என்றவாறு. (ஈடு)

"பூர்த்தியுள்ளதும் அர்ச்சாவதாரத்திலே", "ஆழ்வார்கள் பலவிடங்களிலும் பிரபத்திபண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே" என்ற ஸ்ரீவசனபூஷண வாக்யமும், "ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான தானே சொல்லப்புக்காலும் சொல்லித் தலைக்கட்டவரிதாம்படியிறே அர்ச்சாவதாரத்தின் பூர்த்தியிருப்பது; மயர்வறமதிநலமருளப் பெறுகையாலே பரத்வாதிகளையெல்லாம் கரதலாமலகமாகக் கண்டிருக்கிறார்களிறே ஆழ்வார்கள்; இப்படியிருக்கிறவர்கள், ப்ராப்யத்வாதிசயத்தாலே பலகாலும் பிரபத்திபண்ணுகிறவளவில் பலவிடங்களிலும், அர்ச்சாவதாரத்திலிறே பிரபத்தி பண்ணிற்று" என்ற ஸ்ரீமணவாளமாமுனிகள் வியாக்யானமும் இங்கு நோக்கத்தக்கன.

ஆகையால் ஜீயர் அர்ச்சாவதாரத்தில் பரத்வபுத்தியுண்டாதலே ஸ்ரீவைஷ்ணவத்வமுண்மைக்கு முதலடையாளமாக அருளிச்செய்தார்.

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமா னென்று—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்துந் தொழுவ ருலகளந்த
மூர்த்தி யுருவே முதல். (முதற்றிருவந்தாதி)

ணவர்பக்கல் * தன் மனைவி மக்கள் முதலியோர்பாலுள்ள அன்பளவாகிலும் அன்புபிறந்த அளவிலும், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ‡ வெகுண்

---

* "சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும்
மேலாத்தாய்தந்தையும் அவரேயினியாவரே"

என்று பணித்தருளியவாறு சேதநனுக்கு ஸர்வேச்வரனே எல்லா வுறவு முறையுமாவன். அங்ஙனம் உணர்வது சேதனனது சொரூபம். அது முற்றுப்பெறுதற்கு எவ்வுறவும் அவனடியார்களே என்னும் உணர்வு தோன்றுதல் இன்றியமையாதது. இதனை ஆழ்வார் "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற்கடிமை" என்னும் திருவாய்மொழிகளில் முறையே அடியார்களே தமக்கு எவ்வகையிலும் இறைவரென்றும், இனியரென்றும் பாராட்டியருளிச்செய்வர். ஆதலால் ஸ்ரீவைஷ்ணவர்பக்கல் ஒருவன் தன் மனைவி மக்கள் முதலியோர்பாற் செலுததும் அன்பைக்காட்டிலும் பேரன்புபிறத்தல் வேண்டும். அவ்வளவில்லையாகிலும், அவர்கள்பாற் செலுத்தும் அன்பளவாகிலும் அன்பு பிறத்தல் வேண்டுமென்றற்கு இவ்வாறு கூறியருளினர்.

‡ ஸ்ரீவைஷ்ணவர்கள் பரமஸத்துவநிஷ்டர்களாதலின் அவர்கட்கு ஒருபொழுதும் வெகுட்சி தோன்றுவதரிதாம. அவ்வாறு ஒரோவழித் தோன்றினும் அதுவும் அருள்காரணமாய்ப் பிறரைத் திருத்திப் பணிகொள்ளும் பொருட்டே. ஆதலால் அவர்கள் அவ்வாறு வெகுண்டருளிச்செய்யும் வார்த்தை, தாம கடைத்தேறுதற்குக் காரணமாயிருககுமாதலால் அவற்றை இன்னுரையாகக்கொண்டு விரும்பி வரவேற்பது தக்கதென்றவாறு. இதற்கேற்ப ஓர் ஐதிகம் வருமாறு.— உடையவர் திருமடத்தில் ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுது செய்துகொண்டிருககும்பொழுது ஆச்சான், தண்ணீர் பரிமாறுகிறவர் ஒருபககம் சாய்ந்து நின்று பரிமாறினர். அதனை உடையவர் கண்டு அவர்பால் வந்து அவர் முதுகில் அறைந்து 'நேரேநின்றன்றோ பரிமாறவேண்டும்' என்று கூறியருளினர். அதுகேட்ட ஆச்சான் "பணிமானம் பிழையாமே யடியேனைப்பணிகொண்ட" என்று பணித்தனர் என்பர். [பணிமானம்-கைங்கர்யமுறை] இங்கு ஆச்சான் அபசாரப்படாமைப்பொருட்டு உடையவருக்கு அருளடியாகச் சிறிது வெகுட்சி தோன்றியதும், அதனை ஆச்சான் உகப்புடன் ஏற்றுக்கொண்டாடியதும் நோக்கததக்கன.

"வைததனையின்சொல்லாக்கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைத்ததனைக்கட்டியென்றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள்கண்டு வாழ்வார்" (திரிகடுகம்.)

என்றதுங் காண்க.

டுரைத்தால், அதுபற்றி மனம் வெறுது அதனை இன்சொல்லாகக் கொள்ளுமளவிலும், ஒருவன் தனக்கு ஸ்ரீவைஷ்ணவத்வமுண் டென்றறியலாம் என்று கூறியருளினர்.

அர்ச்சாவதாரத்திற் பரத்வபுத்தியும், அடியார் மாட்டுப் பேரன்பும், அவர்களது கடுஞ்சொல்லை இன்சொல்லாகக்கொள்ளு தலுமென்ற இக்குணங்களுண்டானபோது ஸ்ரீவைஷ்ணவத்தன்மையுண் டென்பது தெள்ளிதினறியலாம்.

(2) நம்பிள்ளை நஞ்சீயரை நோக்கி, (1) மற்றையுபாயங் களுக்கு ப்ரமாணங்களும் மிகுதியாய் அநுஷ்டிப்பவர்களும் பலரா யிருக்கின்றனர். (2) இதற்கு ப்ரமாணமும் சுருங்கி அநுஷ்டிப்பவர் களுஞ் சிலராய் (3), ரிஷி சந்தஸ்தேவதைகளுமின்றியிருப்பானென் என்று கேட்க அதற்கு ஜீயரருளிச்செய்கிறார்:—

இருவர் கூடி ஓராற்றிலிறங்கிப் போகும்பொழுது ஒருவன் ஆற்றிலமிழ்ந்தால் அவனை அமிழாத மற்றவன் கைப்பிடித்துக் கரையேற்றுகைக்கு ஓர் பிரமாணம் வேண்டுமோ? (4) வேண்டு மேனும் (5) முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே (6) தஸ்மாந்

---

(1) மற்றையுபாயங்களென்றது கர்மஞான பக்திகளை.

(2) இதற்கு—ப்ரபத்திக்கு.

(3) ரிஷி சந்தஸ் தேவதைகள் இதற்குமுண்டேனும் அநுஸந்தான காலத்தில் அவற்றோடுகூட அநுஸந்தித்தல் அவசியமில்லாமைபற்றி அவை விலக்கப்பட்டன வென்பர். "ரிஷ்யாதீம்ச்சகரந்யாஸமங்கந்யாஸம்ச்சவர்ஜயேத்" என்றதுங் காண்க. அதுபற்றி "அவையின்றியிருப்பானென்" என்று வினவியருளினர்.

(4) முடிந்த பொருளுக்கு (ஸித்தவிஷயத்திற்கு) பிறிதொரு பிரமாணம் வேண்டாவென்பது கருத்து.

(5) முமுக்ஷு:—மோக்ஷத்தில் விருப்பமுள்ள, அஹம்—நான், சரணம்—உபாயமாக, ப்ரபத்யே—அடைகிறேன்.

(6) தஸ்மாத்—ஆகையால், ஏஷாம்தபஸாம்—இந்த தபஸுகளுக்கு, ந்யாஸம்—ப்ரபத்தியானது, அதிரிக்தம்—வேறுபட்டதாக, ஆஹு:—சொல்லு கிறார்கள். [தைத்ரீய—நாரா.]

யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு: (7) ந்யாஸ இத்யாஹுர் மநீஷிணோ ப்ராஹ்மாணம் (8) நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத:, ந்யாஸஸ்த்யாக இத்யுக்த: சரணாகதிரித்யபி என்பன முதலிய பிரமாணங்களையும் எடுத்துக்காட்டிய பிரமாணங்களிற் குறையில்லை. இனி அதிகாரி சுருக்கம் பார்க்கில் உலகத்தில அனைவரும் ஸம்ஸாரிகளாயிருக்க அவர்களில நாலிரண்டு பேர் (9) உத்தமாச்ரமிகளாலல மிகுதிபற்றி ஸம்ஸாரிகளுக்கொருபர்வும் ஸந்யாஸிகளுக்குத் தாழ்வுமுண்டோ? அன்றியும் (10) ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோயஜேத என்று சுவர்க்கவின்பத்துக்கு ஜோதிஷ்டோம முதலிய யாகங்களை நாலகள் விதிப்பாிற்கும் பொழுது ஊருக்கொருவன் தானே யாகம் செய்தானென்று கேட்கப்படுகிறது, அதற்குத்தான் அதிகாரிகள் போதுமோவென்றோ கேட்பது? (11) ரிஷ்யாதிம்ச்ச கரந்யாஸாங்கந்யாஸம்ச வர்ஜயேத் என்கையால் ரிஷி முதலியனவும் தேவையில்லை. (12) இதில் அர்த்தத்துக்குப பிறிதொன்றோடு இணை வேண்டியிருந்தாலன்றோ இதற்குக் கூட்டு (13) வேண்டுவது. இதுவே என் கருத்தென்று

---

(7) மநீஷிண:—வித்வான்கள். ப்ராஹ்மாணம்—பரப்பிரம்மத்தை—ந்யாஸ இதி—ப்ரபத்தி என்று; ஆஹு:—சொல்லுகிறார்கள். [வை—வை.]

(8) நிக்ஷேப—நிக்ஷேபமென்கிற; அபரபர்யாய:—வேறு பெயரையுடைத்தான, ந்யாஸ:—ப்ரபத்தியானது; பஞ்சாங்கஸம்யுத:—ஐந்தங்கங்களோடுகூடியிருக்கும்; ஸ:—அந்த. ந்யாஸ.—ப்ரபத்தியானது; த்யாக இதி—தியாகமென்றும், சரணாகதி: இதி—சரணாகதியென்றும்; உக்த:—சொல்லப்படுகிறது. [பாஞ்சராத்ரம்.]

(9) உத்தமாசரமி—ஸந்யாஸி.

(10) ஸ்வர்க்ககாம:—சுவர்க்கவின்பத்தை விரும்புகிறவன்; ஜ்யோதிஷ்டோமேந—ஜோதிஷ்டோமமென்னும் வேள்வியினால்; யஜேத—யாகஞ்செய்யக்கடவன்.

(11) ரிஷ்யாதிம்சச—ரிஷி முதலியவைகளையும்; கரந்யாஸம்—கரந்யாஸத்தையும்; அங்கந்யாஸம்சச—அங்கந்யாஸங்களையும்; வர்ஜயேத—விடக்கடவன்.

(12) இதில் அர்த்தத்துக்கு—ப்ரபத்திப்ரதிபாத்யனான ஈசவரனுக்கு. பிறிதொன்றோடு இணை—வேறொன்றின் துணை.

(13) கூட்டு—துணை.

ப்ரபத்தியினுட்பொருளான எம்பெருமானுக்கு வேறொன்றின் துணை வேண்டியிருந்தாலன்றோ ப்ரபத்திக்குத் துணை வேண்டுவது என்பது கருத்து. (வேண்டா என்பதாம்.)

கூறியருளினர். அதுகேட்ட பிள்ளையும் செய்கடன்முற்றியவ ரானர்.

தொடரும். ரே. இராமையங்கார்,
மதுரை.

ஸ்ரீ:

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரனகுளம் ஸ்ரீ. உ. வே. வித்வான்
வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible]
[illegible]

அறிவிற்சிறிய அடியேன் இங்கு விண்ணப்பிக்க எண்ணங் கொண்டது; அத்யவஸாயத்தைப பற்றியதாகும். அத்யவஸாய மென்பது ஒருவிஷயத்தைபபறறின மனவுறுதியேயாம். ஒரு பலத் தைக்கருதி ஒரு தர்மத்தைஅநுஷ்டிக்கப்புகுந்தவனுக்கு மனவுறுதி யில்லாதிருந்தால் பலம் அரியதாயிருந்தாலும் அதனுடைய ஸித்தியிலைப்பிக்கிறதில்லை. அந்த மனவுறுதியில்லாதிருந்தால் பலம் எளியதாயிருந்தாலும் அது ஸித்திப்பது அருமையாகும். ஒரே தர்மத்தைப பலர் அநுஷ்டிக்கப்புகுந்தவிடத்தில் அவரவர்கட்குண் டாகும் அத்யவஸாயதாரதம்யாநுகுணமாக அவரவர்கட்கு ஏற் படக்கூடிய பலத்திலும தாரதம்யங்காணலாம். ஆகவே தர்மத்தை அநுஷ்டிப்பதைக்காட்டிலும் அதிலுண்டான பாவபந்தமே மேன் மையுடையதாயிருக்கும்.

நம்முடைய இதிஹாஸ புராணங்கள், ஒரே தர்மத்தை அநுஷ் டிக்கப்புகுந்தவர்களிடத்திலும் வெவ்வேறு தர்மத்தையநுஷ்டிக்கப் புகுந்தவர்களிடத்திலும் பல ஸித்தியிலும் தாரதம்யத்தைக் காட்டிப் பலத்திலும் தாரதம்யத்தைக் காட்டுகின்றன. இவற்றிற்

கெல்லாம் ஒருட்கருத்திருத்தல் வேண்டும். அஃதாவது காயக்லேச ஸாத்யமான, (சரீரபரயாசையால் சாதிக்கத்தக்கதான) சாமாண்ய தர்மாநுஷ்டானத்திலுங்கூட பாவபந்த தாரதமயங்கொண்டு பல வைஷம்யம் (பிரயோஜனத்தின் வேறுபாடு) ஏற்படுமானல் சரீர பிரயாசையின்றிக்கே பாவபந்தமாத்திரத்தையே கொண்டமையப் பெற்ற சரணாகதி நிஷ்டைக்கு அத்யவஸாயபூர்த்தி (உண்மையான மனவுறுதி) அவசியம் வேண்டுமென்றோ!

சரணாகதி நிஷ்டையாவது.— அறிவுடைய ஆத்மாக்கள், அறிவில்லாத அசேதனங்கள் என்ற இவையனைத்தும் எம்பெருமானுக்குச் சரீரங்களாம். எம்பெருமான் சரீரியாயிருப்பான். சரீரியே சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளைநாடி யத்தனஞ்செய்யத்தக்கவன். சரீரத்துக்குத் தனியே ஒருயத்தனமென்பதில்லை. அதுபோல நம்முடைய நன்மைக்கு அவனே கடவன்; நமக்கு அதுக்கு வேண்டிய ப்ரவிருத்தி யோக்யதையில்லையென்கிற இவனுக்குண்டான அறிவுக்குப் பிரயோஜனமான துணிவுடன் திருஷ்டபலம் (இருக்கும் நாள் சரீரம் நிலைத்திருத்தற்கு வேண்டிய பலம்) நம்முடைய கர்மாதீனமாயிருக்கும்; அதிருஷடபலம (பரலோகத்திலடையக்கூடிய பகவத்பிராபதி முதலிய பலங்கள்) ஈசுவரனிட்ட வழக்காயிருக்குமென்ற உறுதிகொண்டு இவ்விரண்டு பலங்களையும் உத்தேசித்து ஒருவித யத்தனமுமிலலாதிருக்கையாம்.

இப்படித் தன்னுடைய பலஸித்திக்காக ஒருயத்னமுஞ்செய்யாமல் கையொழிந்திருக்கும் நிலைமை சிறந்த ஜ்ஞாநாதிகருக்கும் உண்டாவதரிது. அத்யவஸாயமில்லாதிருப்பானாகில் அது அவனுக்கு அவத்யத்தை (கெடுதியை) விளைக்கும். இதனை "வ்யவஸாயமில்லாதவனுக்கு இநில அந்வயம் ஆமத்தில் போஜனம்போலே" என்று அருளிச்செய்ததாலறியலாம். அஃதாவது—மனவுறுதியில்லாதவனுக்கு இதில் சம்பந்தம் அஜீர்ணத்தில உண்பதுபோல அநர்த்தத்தை விளைக்குமென்பதாம். அத்யவஸாய பூர்த்தியிலலாது (கலங்காத மனவுறுதியிலலாது) பரவிருத்திவாஸனையை மேலிட்டுப் பகவத்ப்ராப்தியில உத்கடேச்சை (மிகுந்த இச்சை) உடையவர்கட்காகவே பக்தி முதலிய உபாயங்களைச் சாஸ்திரம் காட்டிக்கொடுத்

தது. எவ்வளவு சிறந்த ஜ்ஞாநாதிகருக்குங்கூட இவ்வத்யவஸாய முண்டாவது அருமையென்றும், அப்படி அது உறுதிப்படவுண்டா னால் அவனுக்குண்டாகும் மோக்ஷமென்கிற பகவத்ப்ராப்தி அவனு டைய ஸ்வரூபத்திற்குச் சேர்ந்ததாயிருக்குமென்றும், இவ்விஷயத் தைச் சுகர் சுருதிகீதையின் ஆதியில் ஒரு ச்லோகத்தால பரீக்ஷித் துக்கு உபதேசித்தாரென்றும் முன்பு இப்பத்திரிகையில் என்னால் எழுதப்பெற்ற "ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸாரம்" என்ற வியாஸத் தில் வெளியிடப்பட்டன.

இப்படிப்பட்ட அத்யவஸாயம் சாஸ்திர ஜ்ஞாநமடியாகவரு வதானால் அருமைப்படுமென்று கருதியே எம்பெருமான் ஆழ்வார் களை நிர்ஹேதுகமாக விஷயீகரித்து அவர்களுக்கு இந்த அத்யவ ஸாயமுண்டாகும்படி கடாக்ஷித்தருளினான். அதுதான் ஔபதேசிக மாக (உபதேசங்கொண்டே அறியக்கூடியதாக) பரம்பரையாக உப தேசிக்கப்பெற்று வருகிறது. ஆக ஒருபிரகாரததாலும் சலிப்பிக்கக் கூடாததாய் (அசைக்கமுடியாததாய்) பலிக்குமோ? பலியாதொழி யுமோ? என்கிற சந்தேகத்தை அறவே ஒழிக்கச்செய்வதாய் அநுஷ்டாநத்திலே ஊன்றிநிற்கச் செய்வதாயுள்ள அத்யவஸாய முண்டாகவேண்டுவதே சாஸ்திரத்தின் உட்கருத்தாகும்.

ஒருவனுக்கு ஒருகார்யத்தைத் தொடங்கி நடத்தக்கூடிய சக்தி யுண்டானால் அது பரசருந்திவாஸனையாலுண்டானதாகும். இது இவனுக்குஅநாதியாக ஏற்பட்டிருப்பதால் நிவிருத்தியை (கைவொ ழிந்திருக்கும் நிலைமை) பிரயோஜனமாகக்கொண்ட இவ்வத்யவஸா யமுண்டாவதில்லை. இதுவிஷயத்தைக்குறித்து "உய்யக்கொண்டார் விஷயமாக உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது". என்று லோகதேசிகன் அருளியதையும் இங்கு நோக்கத்தக்கது. அதாவது.— உய்யக்கொண்டார் என்பவர் ஒரு வித்வான்; இவர் தத்வத்தை நன்கறிந்தவர்; உபாயங்களை உபதேசிக்கப்புகுந்த சாஸ் திரங்களை ஆராய்ந்து அதன்படியே ஒழுகுமவராயிருந்தார்; இவ ரது நன்னிலைகண்ட உடையவர் திருவுள்ளமிரங்கியருளி, 'இவருக்கு நிவர்த்தி சாஸ்திரத்தில் அத்யவஸாயத்தையுண்டுபண்ணி வைப் போம்' என்று அவருடைய சமயத்தை எதிர்பார்த்து 'எம்பெரு

மானையே உபாயமாகப்பற்றிப் பிறிதொரு ப்ரவிருத்தியின்றியிருப்பதே தக்கது' என்று அருளிச்செய்தார். இதுகேட்ட உய்யக்கொண்டார், 'தேவரீர் அருளிச்செய்த அர்த்தவிசேஷம் மிகவும் அழகாகவிருக்கிறது; ஆனால் அடியேனுக்கதில் ருசிபிறக்கவில்லை; என்செய்வேன்' என்றனர். அப்பொழுது எம்பெருமானார் 'நீர் வித்வானாயிருக்கின்றீராதலால் ஆதநக்துக்கிசைந்தீர்; பகவத் கடாக்ஷமில்லாததினால் அவ்வார்த்தை நெஞ்சிலூன்ற அதன்படி ஒழுகவேண்டுமென்பதில் ருசியுண்டாகவில்லை' என்று அருளிச்செய்தார் என்பதாம்.

§ ஸத்வோத்ரிக்தரான எம்பெருமானார் அந்த வித்வானைக் கடாக்ஷித்து உபதேசிக்கும்போது அது பலியாதொழிவானேன்? பகவத் கடாக்ஷத்திலும் பாகவத கடாக்ஷம் சிறந்ததன்றோ வென்னில்; இவ்விஷயத்தில் எம்பெருமானார் திருவுள்ளம் ஒருவிதமாகும். அஃதாவது.— இவ்வர்த்தத்தில் ருசிவிச்வாசம் பிறந்து, அநுஷ்டானம்வரை நடந்துசெல்லும் அத்யவஸாயம் உண்டாவதெல்லாம் தன்னுடைய பாண்டித்யத்தாலல்ல; கடாக்ஷ விசேஷத்தாலாகுமென்பதை யாவருக்கும் புலப்படுத்தவேண்டுமென்பதற்காகக் 'கடாக்ஷிக்காமல் உபதேசிப்போம்' என்று கருதினரென்பதாம். இதனை, பிராட்டியார் இராவணனை நோக்கி 'இவன் துர்புத்திநீங்கி உஜ்ஜீவிக்கக்கடவன்' என்று அநுக்ரஹிக்காமல் ஒரு காரியப்பாட்டால் "மித்ர மௌபயிகம் கர்த்தும்" என்று தொடங்கி உபதேசஞ்செய்தனள்; என்பதனாலுமறியலாம். மேலும் இவ்விஷயம் பின்வரும் வியாஸத்தில் வெளியாகும்.

வேதார்த்தஸாரங்களை உள்ளபடியுணர்ந்து பலருக்கும் தெளிவாய் உபதேசித்ததுவே காரணமாக வேதாந்தாசார்யரென்று விருதுபெற்ற நிகமாந்த தேசிகன், * [illegible] விபீஷண [illegible]

§ ஸத்வோத்ரிக்தர்–ஸத்வகுணத்தை யுண்பெண்ணுகின்றவர்.

† இந்தச் சுலோகம நிகமாந்த தேசிகன் நம்பெருமானைநோக்கி அருளிச்செய்தது. இதன்பொருளாவது — அர்ஜுனனையும், விபீஷணாழ்வானையும் வியாஜமாகக்கொண்டு வெளியிட்டருளிய வார்த்தையை (என்னையே சரண

ஸ்ருத்வா ஹ்யம் தந்நிஸ்வநம் கோஷவத்ஸ்வ” “உத்யாதநம்ஜய விபீஷண லக்ஷ்யயாதே ப்ரத்யாத்ய லக்ஷ்மண முநேர்பவதா விதீர்ணம், ச்ருத்வா வரம் தததுபந்த மதாவலிப்தே” என்று தம்முடைய நிலையை உறுதியாக அருளிச்செய்ததனால இவர் எம்பெருமானை யையே உண்மையாகப்பற்றியவரென்பதும், சரணாகதி முதலிய உபாயாந்தரங்களிற் பற்றற்றவரென்பதும் வெளியாகும். இந்த நிஷ்டையையுடையவராகிய இவர் பிறருக்குபதேசிக்கும்போது சரணாகதியில் உபாயத்வத்தை ஏறிட்டுபதேசித்தார். இதனை ஆராய்ந்து பார்க்கும்போது எம்பெருமானே அடைதற்குரிய பலமாகவும், அதுக்குவேண்டிய உபாயமாகவும் உறுதிகொண்டு § திருஷ்டாதிருஷ்டபலன்களை உத்தேசித்து அவற்றையடைதற்குரிய உபாயத்தில் நசையற்றுக் கையொழிந்திருக்கும் நிலைமை எவர்க்குமுண்டாவது அரிதாமென்று ‡ சரணாகதியை அதிகார கோடியிலேகொண்டு உபதேசித்தாரென்பதே வெளியாகும். இவ்வாறு கொள்ளாதபோது இவர் விப்ரலம்பகோடியிற் சேர்ந்தவர் (பிறரை வஞ்சிக்கப்புகுந்தவர்களின் கோஷடியைச் சார்ந்தவராவர்) என்று கருதும்படி நேரும். ஆகையால் எம்பெருமானை யொழிய வேறு பலங்களில் ஆசையொழித்து, அவனை யடையவேண்டி (பரவிருத்திவாஸனைமேலிட்டிருப்பதால்) உபாயாந்தரங்களில் ஆசை

மாகவடைவாய்; நான் உன்னை முக்தனும்படி செய்கிறேன் என்று அர்ஜுனனை நோக்கியும், என்னைத் தோழமைகொள்ள வந்தவனை அஃதாவது சரணமடையவந்தவனை நான் ஒருநாளும் விட்டுக்கொடேனென்று விபீஷணனை நோக்கியும் அருளிச்செய்த வார்த்தையை)க்கொண்டு எம்பெருமானுக்கு விச்வாசம் பிறக்கும்படிசெய்து ‘உம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகட்கும் மோக்ஷங்கொடுக்கிறோம்’ என்று உறுதியாக அருளிச்செய்து, அவருக்குத் தேவரீர் கொடுத்த வரத்தைக்கேட்டு, அவருடைய ஸம்பந்த ஸம்பந்தமகொண்டு களித்துத் திரிகிற அடியேன்மீது கிருபை செய்தருளவேண்டும் என்பதாம்.

§ திருஷ்டபலம்--இவ்வுலகில் அநுபவிக்கும் பிரயோஜனம்.
அதிருஷ்டபலம்--பரலோகத்தில் அநுபவிக்கும் பிரயோஜனம்.

‡ ‘ஸ்வர்க்கத்தில் இச்சையுடையவன் ஜ்யோதிஷ்டோம யாகத்தைச் செய்யக்கடவன்’’ என்பதில் ஸ்வர்க்க விஷய இச்சை ஜ்யோதிஷ்டோமத்

யதிகரித்து, அதிலும கடினோபாயங்களில முயல்வதற்குச் சக்தியற்றிருக்கும் அதிகாரிகளை நோக்கியே சரணாகதிக்கு உபாயத்வத்தை ஏறிட்டு அருளிச்செய்தாரென்றே கொள்ளவேண்டும்.

சரணாகதியில் உபாயத்வபுத்திசெய்யும் அதிகாரிகள் 'மோக்ஷமென்கிற புருஷார்த்தம் நமக்கே ஏற்பட்ட நன்மையாகும்; நம்முடைய நன்மைக்கு நாமே முயலவேண்டியது அவசியம்' என்ற ஊக்கமுடையவர்கள். அவராவார் எம்பெருமான் இரங்கியருள் செய்வதற்காக உபாயாநுஷ்டானம் செய்பவர்.

சாஸ்திரங்களில் ஏற்பட்ட நித்ய கர்மங்கள் முழுமையும் எம்பெருமானுடைய ப்ரீதியை உத்தேசித்தே அநுஷ்டிக்கப்படுகின்றன. பாகவதம் மூன்றாவது ஸ்கந்தம் முப்பத்தொன்பதாவது அத்யாயத்தில கபிலர் தேவஹூதிக்கு உபதேசிக்கும்போது பகவத்பக்தியுள்ள அதிகாரிகளில் அவரவர்களின் குணகுணங்கொண்டு பேதங்காட்டிச்செல்லும்போது பததாவது சுலோகத்தில் இவ்வதிகாரியை ஸாத்விக பக்தர்களில் மத்யமாதிகாரியாகக் காட்டியிருக்கிறார்.

புத்திரனிடத்தில் பிதாவுக்குத் தன்னடையே ப்ரீதியுண்டாவதுபோல எம்பெருமானுக்குச் சேதனரிடத்துத் தன்னடையே ப்ரீதியுண்டாகும். பெரும்பாலும் எம்பெருமானுக்குச் சேதனர்களிடத்தில் ப்ரீதியுண்டாகாமைக்குச் சேதனர்கள் செய்கின்ற தியவொழுக்கமே காரணமாகும். சொற்படிநடக்காததியவொழுக்கமுண்டய புத்திரர்களிடத்தில் பிதாவுக்கு அன்பு உண்டாகாதன்றோ!

. திற்கு உபாயமாகமாட்டாது. ஸ்வர்க்க விஷயமான இச்சையுடையவன் அவ்வேள்வி செய்தற்கு அதிகாரியாவான். எனவே அந்த இச்சை, அவ்வேள்வி செய்தற்கு அதிகாரயோக்யதையையுண்டுபண்ணித் தருதற்குரியதாயிருக்குமென்று கொள்வதுபோல, சரணாகதியானது ஸர்வேசுவரனை வரித்தற்குபாயமாகமாட்டாது. சரணாகதிநிஷ்டையுடையவன் எம்பெருமானையுபாயமாகக் கொள்வதற்கு அதிகாரியாவன். எனவே சரணாகதியானது எம்பெருமானை உபாயமாகவரிப்பதற்கு அதிகார யோக்யதையை உண்டுபண்ணித் தருவதற்குரியதாயிருக்குமென்று கொள்ளவேண்டும். இக்கருத்துடன் தேசிகன் உபதேசித்தருளினார்.

'சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்கள் எம்பெருமானுடைய ஆஜ்ஞாரூபங்களாதலால் நாம் அவற்றைக் கைங்கர்யமாகச்செய்யக் கடவோம்' என்று மனவுறுதிகொண்டு அநுஷ்டிப்பவர்களை ஸாத்விக பக்தர்களில் உத்தமாதிகாரியென்று குறிப்பிடப்பெற்றுளது. முன்னுரைக்கபபெற்ற மத்யமாதிகாரிகளை நோக்கியே சரணாகதிக்கு உபாயத்வமுண்டென்று தேசிகன் அருளிச்செய்தாரென்று கொள்ளவேண்டும்.

பெரியவாசசான்பிள்ளை "கல்லெடுத்துகல்மாரிகாத்தாய்" என்ற பாசுர வியாக்யானததில் 'அவ்வுபதேசம் நமக்காகவன்று' என்று உபதேசித்துள்ளார். இங்ஙனம் இவர் அருளிச்செய்த விஷயம் விரிவாக 'வைஷ்ணவ ஸித்தாந்த ஸாரத்தில்' எடுத்துரைக்கப் பட்டது.

சரணாகதி நிஷ்டையில் பூரணமான அத்யவஸாயம உண்டாவது அருமையாம். ஆயினும் அத்யவஸாயமுண்டாகவேண்டியதும் அவசியமாம். இனி, இது முக்யமாமென்பதை விளக்குவதற்கு இதன் பெருமை எடுத்துரைக்கபபெறும்.—

முன்பு குறிப்பிட்டபடி, உலகத்தில் சாதாரண தர்மாநுஷ்டானத்திலும் அத்யவஸாயம் திடமாகவுண்டானல் பலஸித்தித் தாமதமின்றிக் கிடைப்பதும், அத்யவஸாயங் குறைந்தால் பலம் எளிதாயினும் ஸித்திப்பதற்குத் தாமதப்படுதலும், ஒரே தர்மத்தைப் பலர் அநுஷ்டிக்கப்புகுந்தவிடத்தில் அத்யவஸாய பேதத்திற்குத் தகுதியாகப் பலபேதமுண்டாவதும் காணலாம். மேலும் இவற்றைத் துருவன், விசுவாமித்திரன், திரௌபதி, தமயந்தி, ஸாவித்திரீ, ஏகபத்னீ என்ற இவர்களின் சரித்திரங்களாலும், அத்யவஸாயம், சரணாகதி நிஷ்டையிலிருக்கவேண்டிய முறையை ஜனககுல சுந்தரியின் (சீதாபிராட்டியாரின்) அநுஷ்டானத்தாலும் எடுத்துரைத்து இவ்விஷயத்தைப் பூர்த்தி செய்கிறேன்.

தொடரும்.

ஸ்ரீ:

எம்பெருமானார் அவதார ரஹஸ்யம்.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான்
வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

எம்பெருமானார் வைபவத்தைக் குறித்துப் பல க்ரந்தங்கள் வெளியாயிருக்கின்றன. இன்னும் எத்தனை நூல் தோன்றினும் அவரது பெருமையை முற்றப்பெற உரைக்கவொண்ணாதென்பது தெளிவாதலால் பல நூல்கள் தோன்றியிருக்கச் செய்தேயும் இங்கு யானும் அவரது அவதார ரஹஸ்யத்தை எழுதத்துணிகிறேன். "அண்ணலிராமாநுசன் வந்து தோன்றியவப்பொழுதே, நண்ணரு ஞானந்தலைக்கொண்டு நாரணற்காயினர்" என்றபடி எம்பெருமானார் அவதரித்தபின்பே உலகினர் நன் ஞானப்பேறெய்தி நாரணற்காயினரென்பதை எம்பெருமானெடுத்துக்காட்டினன் என்ற இதனை எண்டெடுத்து விளக்குவதே முக்ய நோக்கமாகும்.

ஸர்வேசுவரன் அவதரித்தும் சேதனர் திருந்தாமைகண்டு தாரக போஷக போக்யங்களெல்லாம் கண்ணனென்று கருதி உறுதிகொண்டிருக்கும் மெய்யடியார்கள் கிடைப்பதரிதென்று கவலையுற்றுச் சென்றான். அவனுங் கைவிட்ட இவ்விருள்தருமா ஞாலத்தே எம்பெருமானார் அவதாரத்தால் எல்லோரும் உஜ்ஜீவிக்கப்போகின்றனரென்று மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் "பொலிகபொலிக" என்ற திருவாய்மொழியில் கொண்டாடுகின்றார்.

இங்ஙனம் ஆழ்வாரால் கொண்டாடப்பெற்ற இவர் ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதரித்தார். இவரது பெருமையைச் சேஷாவதாரமாகிய தாமே உரைக்கினல்லது ஏனையோர்கட் குரைக்கலாகுமோ? இவர் அவதாரத்தைக்குறித்து "𑌅𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣
𑌶𑍍𑌚 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌂, 𑌬𑌲𑌭𑌦𑍍𑌰𑌃 𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌲𑍌 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿"
"அநந்த ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணச்சதத: பரம், பலபத்ர: ஸ்த்ரிதீயஸ்து கலௌகச்சித் பவிஷ்யதி" பௌராணிகர் இவரைச் சேஷா

வதாரமென்று வெளியிட்டார். 'கலௌகச்சித் பவிஷ்யதி' என்பது தம்மைக் குறிப்பிடுவதாகுமென்பதைத் தாமே ஆழ்வானுக் கருளிச் செய்தார். இனி, 'கலௌ ராமர் நுஜோமுநி:' என்று பாடபேதமுண் டெனக் கூறுவாருமுண்டு. இவருக்கு * உபயவிபூதியையும் ஸ்வா தீனமாக்கினமை தோற்ற பெரியபெருமாள் இவருக்கு உடையவர் என்று திருநாமஞ் சாத்தினர்.

இவரது கரைகடந்த அருளுடைமையைக்கண்ட திருக்கோஷ்டியூர்நம்பிகள் எம்பெருமானாரென்று திருநாமம் சாத்தினர். எம் பெருமானாரென்பதற்கு எமக்குப் பெருமானார் என்று பொருளாதலால் இவரது ஸம்பந்தத்தை நம்பிகள் பெரிதும் விரும்பினா ரென்று தோற்றுகிறது. பேற்றுக்கு இவரது ஸம்பந்தமே பெரிதும் வேண்டற்பாலதென்பது தோற்ற எல்லோரும் இவரது மற்றத் திருநாமங்களை ஸதா நுஸந்தேய்மாக உச்சரியாமல் ஸம்பந்தத்தைக் குறிப்பிடுகின்ற 'எம்பெருமானார் திருவடிகளே சரணம்' என்பதை அநுஸந்திக்கின்றனர்.

இப்படி உபயவிபூதிக்குக் கடவராய், ஒவ்வொருவரும் உறவு கொண்டாடிச் சரணமடையும்படி ஸர்வ ஸுஹ்ருத்தாய் ஈசுவர ஸ்வாதந்தர்யத்துக்கு அஞ்சவேண்டாதபடி அதை § அறைகூவித் திரியலாம்படி இருள்தருமாஞாலத்தைத் தமதருள் கொண்டு ஆளப் பிறந்தவர் இவரே.

இங்ஙனம் அவதரித்த இவரை நித்யஸூரிகளில் ஒருவராகிய சேஷ விருத்தியே நிரூபகமாகக்கொண்ட திருவநந்தாழ்வான் எம் பெருமானுடைய திருவுள்ளமுகக்க அவர் நியமனத்தாற் பிறந்த தாகக்கொண்டு சேஷாவதாரமெனக் கூறுவர் பெரியோர். இவர் பரத்வத்தில் சேஷ விருத்தியையே உடையரானதுகொண்டு அதுவே நிரூபகமாகச் சேஷன் என்று திருநாமம் பெற்றவர். இவர்

* உபயவிபூதி—லீலாவிபூதியும், நித்யவிபூதியும். அவையாவன.— இவ் வுலகும் பரமபதமுமாம்.

§ அறைகூவித்திரிதல்—அறையோ அறையோ என்று கூவித்திரிதல். அஃதாவது.— வெற்றி கொண்டவன் கூவித்திரியும் சொல்லாம். [அறை- வெற்றிக்குறிப்புச்சொல்.]

இளையபெருமாளாய் அவதரித்தபோது "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று சேஷத்வானுகுணவிருத்தி விசேஷத்தையுடையரானது கொண்டு லக்ஷ்மணன் என்று திருநாமம் பெற்றனர்.

ஸர்வேசுவரன் கண்ணனாகவந்தவதரித்தகாலத்தில் இவர் அவனுக்குச்சேஷியாக (மூத்தோராகிய பலபத்திராக) அவதரித்தனர். முன்பு பெரியபெருமாள் உடையவர் என்று திருநாமம் சாத்தியதினால் இவர் உபயவிபூதிக்கும் சேஷியானார் என்று குறிப்பிடப்பெற்றது. பலபத்திராக அவதரித்தனரென்றதனால் விபூதிமானாகிய ஸர்வேசுவரனுக்கும் சேஷியாக அவதரித்தார் என்பது வெளியாயிற்று. இன்னும் இவர் திருநாராயணபுரத்தெம்பெருமானைச் செல்வப்பிள்ளையாகக்கொண்டதனாலும், திருக்குறுங்குடி நம்பிக்கு மந்த்ரோபதேசஞ்செய்து அவரைச் சிஷ்யனாகக்கொண்டதனாலும், சேஷிக்கும் சேஷியாயிருந்தாரென்பது தெளிவு. இவர் சேஷபூதராய் விளங்கியதோடு சேஷியாயும் விளங்கினரென்ற முறைதடுமாற்றத்திற்கு ஏதேனும் உட்கருத்திருத்தல் வேண்டும். இது, மற்றொரு வியாசத்தில் வெளியிடப்பெறும்.

"அநந்த: ப்ரதமம் ரூபம்" "அநந்தப்ரதமம் ரூபம்" என்று ரிஷிகள் இவர் அவதாரத்தைக் கொண்டாடினார்கள். இனி அவர்களினும் விலக்ஷணரான ஆழ்வார் "கலியுங்கெடுங்கண்டுகொண்மின்" என்றார். அஃதாவது கலிதோஷம் கெட்டுப்போகும்படி பிறப்பாரொருவரைக் காண்மின் என்பதாம். ஸர்வேசுவரனும் இந்நிலத்தில் பலமுறைபிறந்து திருத்தபபார்த்தவிடத்தும் பயனற்றது கண்டு கண்ணீர்விட்டுப் போனவன் பின்னையும் விடமாட்டாதே கண்ணனாய் வந்தவதரித்தபோது இப்பெரியாரவதாரத்தால் நாடுந்திருந்திக் கலிதோஷமும் கெடுமென்று திருவுள்ளங்கொண்டு களித்தான். இதனைப் பின்னர்த் தெளிவாய் விளக்கலாகும்.

நிற்க; நம் பூர்வாசார்யர்கள் எம்பெருமானாரையும், மணவாளமாமுனிகளையும் சேஷாவதாரமென்பதுபோல நாதமுனிகள் தொடங்கி மணவாளமாமுனிகள் வரையிலுள்ள எல்லா ஆசார்யர்களும் நித்யஸூரிகளின் அவதாரமென்றே சொல்லுகிறார்கள். இவ்வாறன்றி ஆழ்வார்கள்மாத்திரம் நித்ய ஸம்ஸாரிகளாயிருந்தவர்

களென்றும், எம்பெருமான் நாடு திருந்தவேண்டி இவர்களைத் திருத்தினனென்றும் சொல்வார்கள். சில பெரியோர் ஆழ்வார்களை அபிநவதசாவதாரமென்பர்கள். இவ்வாழ்வார்களின் வைபவத்தைக்கண்டு இவர்கள் இங்ஙனம் கூறினார்களென்று கொள்ளத் தக்கது. ஆழ்வார்கள் ஸம்ஸாரிகளென்பதே ஸித்தாந்தமாம். இவ்வாறு கொள்ளாமல் ஸர்வேசுவரன் தானகவே ஆழ்வார்களாக அவதரித்தானெனக்கொண்டால் அவன் பலமுறை அவதரித்துப் பயனற்றது கண்டு, இனி ஸஜாதீயரைக்கொண்டு திருத்தவேண்டுமெனக் கருதினனென்பது பொருந்தாது. நித்ய ஸூரிகளே வந்தவதரித்தார்களென்னில் தாம் வந்தவதரித்த மர்மமறிவார்களாதலால் உலகினிலைமை கண்டு பதறினார்களென்பது பொருந்தாது. ஆழ்வார்கள் நித்யஸூரிகளம்சமாகவும் பகவதம்சமாகவும் வந்தவதரித்தார்களெனக் கொள்வோமாகில் ஸம்ஸாராநுவர்த்தனத்தால் பயமுற்றனரென்பதும் பொய்யாய் விடும். பொய்யில் பாடலுக்கும் பொருந்தாதன்றோ!

ஆகவே எம்பெருமான் புருஷகாரத்தையும், பிறகாரணங்களையும்விரும்பாமல் தன்னுடைய நிரங்குசஸ்வாதந்த்ர்யம் சேதனுஜ்ஜீவனேபயோகியாய்த்தலையெடுத்துநாடுதிருத்த யாரேனும்சிலரைப் பணிகொள்ள விரும்பி மாறிமாறிப்பலபிறப்பும் பிறந்தார் சிலரை "அறிவின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்று தாமே கொண்டாடும்படி திருத்தியதென்றே கொள்ளத்தக்கது.

ஆழ்வார்கள் ஸம்ஸாரிகளாயிருந்துவைத்தே ஸர்வேசுவரனுடையநிர்ஹேதுக விஷயீகாரம்பெற்று அது காரணமாக எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுணங்களை ஆழ்ந்தநுபவிக்கும் பெருமையுடையராயிருந்தமையால் ஆழ்வார்களென வழங்கப்பெற்றனர். நிகமாந்த தேசிகனும் இவர்களைப்பற்றிப் பேசும்போது நித்யஸம்ஸாரிகளென்றே பேசியிருக்கிறார். எங்ஙனேயென்னில்! ரஹஸ்ய த்ரயஸாரம், குருபரம்பராஸாராதிகாரத்தில் "வைஞுவெடூாத வெந்நேஷு வைஞுதேஷு தெஷு தெஷு கலௌயுகெ" "பூர்வோத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌயுகே" என்கிறபடியே பராங்குசாதி ரூபேண அபிநவதசாவதாரத்தைப் பண்ணி

யருளினனென்றருளிச்செய்தார். அதாவது முன்புண்டான ஸம்ஸாரிகளில், ஸர்வேசுவரன் அநுப்ரவேசத்தைச்செய்து கலியுகத்தில் தன் உட்கருத்தைச் செய்துகொள்கிறன்; என்கிற பிரமாணப் படியே எம்பெருமான் பராங்குசரூபமாக ஒரு அபிநவதசாவதாரத்தைச்செய்தருளின னென்பதாம். இதனாலும் எம்பெருமான் ஸம்ஸாரிகளிடத்து ஆவேசித்து அவர்களை ஆழ்வார்களாகச் செய்தானென்பது விளங்கும்.

ரஹஸ்யத்ரய வ்யாக்யாநமாகிய ஸாரஸ்வாதினியில் "பூர்வோத்பந்நேஷு" என்ற வசனம் பொதுவாயிருந்தாலும் இது ஆழ்வார் விஷயமென்பதே இவர் திருவுள்ளம். ஆழ்வார்கள் ஸம்ஸாரிகளானால் இவர்களை அபிநவதசாவதாரம் என்று வழங்கலாமோவென்னில் தத்வத்ரயாதிகாரத்தில் ஈசுவரப்ரகரணத்தில் எம்பெருமான் ஒரு வ்யக்தி விசேஷத்தில் ஆவேசித்திருக்குமிருப்பையும் இவர் அவதாரமென்றே அருளிச்செய்திருப்பதால் அபிநவதசாவதாரமென்னத் தட்டில்லை; என்ற கருத்துள்ள பலவாக்யங்கள் காணப்படுகின்றன; ஆதலால் பொருந்துமென்க.

தொடரும்.

ஸ்ரீ:

பாகவதாபசாரம்.

(142-ம் பக்கத்தொடர்ச்சி.)

(20) பகவத் ஸம்பந்தமுண்டானல் இரண்டும் ஒக்குமோ

(20) • முன் ஜன்மாதிகளின் உயர்வும் இழிவும் பேற்றுக்கும் இழவுக்கும் காரணமன்று என்று கழித்து, பகவத் ஸம்பந்தமும், அஸம்பந்தமும் அவற்றுக்குக் காரணமென்றுரைக்கப்பட்டது. ஜந்மாதிகளால் உயர்ந்தவர்க்கும் அவற்றால் இழிந்தவர்க்கும் பகவத் ஸம்பந்தமுண்டானல் பகவத் ஸம்பந்தங்காரணமாக இரண்டு பேர்களும் சமமாகிலும் ஜந்மாதிகளால் உயர்ந்தவர்க்கு அவற்றால் ஒரு ஏற்றத்தை அவசியம் நாம் அங்கீகரிக்கத்தான் வேண்டும். அப்படியிருக்க ஜந்மாதிகளின் உயர்வுமுற்றும் பிரயோஜனமில்லையென்பது எவ்வாறு பொருந்துமென்னும் சங்கையுண்டாக, 'பகவத் ஸம்பந்தம்'

வென்னில்; ஒவ்வாது. (21) உத்க்ருஷ்டமாக ப்ரமித்த ஜந்மம் ப்ர

என்று தொடங்கி அதற்குச் சமாதானம் அருளிச்செய்கின்றார். பகவத்ஸம்பந்தமுண்டானால் என்றது பகவதநர்யார்ஹ சேஷபூதன் நான் என்னும் ஞானமுண்டானால் என்றவாறு. இரண்டும் என்றது உயர்ந்ததும் இழிந்ததுமான இரண்டு ஜந்மங்களும் என்றவாறு. ஒக்குமோவென்றது சமமாமோ வென்றவாறு.

. முன் கேள்வி கேட்டவர் உயர்வாக நினைத்த உயர்ந்த ஜந்மத்தை இழிவாகவும், இழிவாக நினைத்த தாழ்ந்த ஜந்மத்தை உயர்வாகவும் திருவுள்ளம்பற்றி, அதற்குப் பதில் அருளிச்செய்கின்றார் ஒவ்வாது என்று. ஒவ்வாது என்றது இரண்டு பேர்களும் பகவத் ஸம்பந்தத்தால் சமமாகினும் ஜந்மாதிகளால் சமமாகார்கள் என்றவாறு.

(21) ஒவ்வாது என்றவர் திருவுள்ளக்கருத்தைக் கேள்வி கேட்டவர் அறிந்து 'கிணறுவெட்டப் பூதங்கிளம்பியது' போல நாம் உயர்ந்த ஜந்மக்கட்கு ஏற்றத்தைச் சம்பாதிக்கவேண்டி கேள்விகேட்டுத் தாழ்வைச் சம்பாதித்துக் கொண்டோமென்று நினைத்து உயர்ந்த ஜந்மாதிகட்கு ஒருயர்வில்லாவிட்டாலும் இப்போதுண்டாகிய இழிவினின்றும் தப்பினால் போதுமென்று கருதி, 'தேவரீர் முன்பு ஜந்ம வ்ருத்தங்களின் உயர்வும், தாழ்வும் பேற்றுக்கும் இழவுக்கும் காரணமன்றென்று கழித்து அதற்கு விரோதமாக இப்போது உயர்ந்த ஜந்மங்கள் தாழ்வென்றும், தாழ்ந்த ஜந்மங்கள் உயர்வென்றும் சொல்லலாமோவென்று சங்கிக்க, அதற்குசமாதானம் அருளிச்செய்கின்றார் உத்க்ருஷ்டவென்று தொடங்கி. உத்க்ருஷ்டமாக ப்ரமித்த ஜந்மம் என்றது உயர்வாக மயங்கின ஜந்மம் என்றவாறு. மயக்கமாவது—உண்மையில் வெள்ளியல்லாத முத்துசிப்பியை வெள்ளியென்றறிவதாம். அங்ஙனமே இவ்விடத்தும் ஜந்மாதியின் உயர்வால் அஹங்கரித்துப் பகவத் விஷயத்தை இழப்பதற்குக் காரணமாய் அதனால் மிகவும் தாழ்வாயிருக்கின்ற ப்ராஹ்மண்யத்தை உயர்வென்றறிந்தது மயக்கவுணர்வாமென்றவாறு ப்ரம்ச சம்பாவனையாலே என்றது * உபாயாந்தரங்களை அநுஷ்டிப்பதற்கு அதிகாரமிருப்பதனாலே இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்டநிவ்ருத்திக்கும் ஈசுவரனே தப்பாத உபாயமென்று நினைத்திருக்கின்ற அநந்யோபாயத்வமாகிற அதிகாரத்தினின்றும் நழுவுதல் வருகைக்கு யோக்யமாயிருக்கையாலே என்றவாறு. பயஜநகமென்றது பயத்துக்குக் காரணமென்றவாறு. அஃதாவது உபாயாந்தரத்திற்கு யோக்யதையுடைய இந்த ஜந்மம் அவ்வுபாயாந்தரத்தில் மூட்டி அநந்யோபாயத்தினின்றும் நழுவச்செய்யுமோவென்னும் பயத்துக்குக் காரணமென்பதாம். இதற்கு ப்ரமாணங்காட்டுகிறார் "சரீரேச" என்கிறபடியே என்று.

* உபாயாந்தரம்—கர்மம் ஞானம் பக்திகள்.

ம்சசம்பாவனையாலே 'சரீரேச' என்கிறபடியே பயஜநகம். (22) அது

இதன் பொருள் உபாயாந்தரங்களைப் பார்த்தாலும், அதற்கு யோக்யதையுடைய சரீரத்தைப்பார்த்தாலும் எனக்கு மிகவும் பயமுண்டாகிறதென்பதாம்.

(22) அஹங்காரத்திற்குக் காரணமாயும், உபாயாந்தராநுஷ்டானத்திற்குக் காரணமாயுமிருக்கிற இரண்டு தோஷத்தோடு மூன்றாவது தோஷத்தையுங்காட்டுகிறார் அதுக்கு என்று தொடங்கி. அதுக்கு என்றது முற்கூறிய பிராஹ்மண்யத்துக்கு என்றவாறு. ஸ்வரூபப்ராப்தமான நைச்யம் பாவிக்க வேண்டும் என்றது பகவத சேஷத்வத்தின் எல்லையாகிற பாகவத சேஷத்வத்தில் வந்தால் சேஷத்வமாகிற ஸ்வரூபத்திற்குத் தகுதியான தாழ்மை பிறர் செய்வது கண்டு கற்றுக்கொள்ளவேண்டும் என்றவாறு.

இதனால் சங்கைக்கு என்ன சமாதானம் ஏற்பட்டதென்றால் முன் ஜந்மாதிகளின் உயர்வும் தாழ்வும் பகவத்ப்ராப்திக்கு நேரே காரணமன்றென்னும் அபிப்பிராயத்தால் அப்ரயோஜகம் என்று கழிக்கப்பட்டன. இப்பொழுது பகவத்ப்ராப்தியின் காரணத்திற்கு (நான் பகவதநந்யார்ஹசேஷபூதன் என்னும் ஞானரூப பகவத் ஸம்பந்தத்திற்கு) ஜந்மாதிகளின் உயர்வு விரோதியாயிருத்தல்பற்றி அதனைத் தாழ்வென்றும், ஜந்மாதிகளின் தாழ்வு பகவத்ப்ராப்தியின் காரணத்திற்கு அநுகூலமாயிருத்தல்பற்றி அதனை உயர்வென்றும் அருளிசெய்தார்.— எது நேராகவாவது பரம்பரையாகவாவது பகவத்ப்ராப்திக்குக் காரணமாமோ அது உயர்ந்ததாம். எது நேராகவாவது பரம்பரையாகவாவது பகவத்ப்ராப்திக்கு விரோதியாமோ அது இழிந்ததாம். ஜந்மாதிகளின் உயர்வு பாகவதாபசார மூலமாயும், உபாயாநுஷ்டான மூலமாயும் பரம்பரையாக பகவத்ப்ராப்திக்கு விரோதியாயிருப்பதோடு மோக்ஷசாதனமான பகவத்சம்பந்தத்திற்கு நேரே விரோதியுமாம். அது வருமாறு.—

நான் பகவதநந்யார்ஹசேஷபூதனென்னும் ஞானமே பகவத்ஸம்பந்தமென்று முன்னுரைக்கப்பட்டது. இந்த ஞானத்தின் விஷயமான சேஷத்வத்தின் எல்லை பாகவதபர்யந்தமாம். 'நான் பாகவதபர்யந்தம் அடிமையென்னும் ஞானம் எவ்வதிகரணத்தில் (எவ்விடத்தில்) உண்டாகின்றதோ அவ்வதிகரணத்திலே பகவத் ஸம்பந்தத்தின் பூர்த்தியுண்டாகின்றது. இந்த பகவத ஸம்பந்தமே பேற்றுக்குக் காரணமாம். நான் ஜந்மாதிகளால் உயர்ந்தவன் என்னும் ஜந்மாதிகளின் உயர்வை விஷயஞ்செய்கின்ற ஞானம் எவ்வதிகரணத்திலுண்டாகின்றதோ அவ்வதிகரணத்தில் பாகவத சேஷத்வரூபமான பகவத் ஸம்பந்தத்தின் பூர்த்தியுண்டாவதில்லை. ஏனென்றால் நான் ஜந்மாதிகளால் உயர்ந்தவன் என்னும் ஜந்மாதிகளின் உயர்வை விஷயஞ்செய்யும் ஞானமானது பாகவதபர்யந்தமடிமையென்னும் சேஷத்வ ஞானத்தினை ஜீவிக்கவிடாமல் தடுப்பதால் அந்த ஞானம் (ஜந்மாதியாலுயர்ந்தவன் என்னும் ஞானம்) பாகவதசேஷத்வ ஞானத்தின் விரோதியாமென்றறியத்தக்கது.

இவ்வாறாக ஜந்மாதியின் உயர்வு பகவத்ப்ராப்திக்குக் காரணமான பகவத்ஸம்பந்தத்திற்கும் நேரே விரோதியாவதால் இது தாழ்ந்தது என்பதாம்.

க்கு ஸ்வரூபபிராப்தமான நைச்சியம் பாவிக்கவேணும். (23) அபகிருஷ்டமாக ப்ரமித்த உத்க்ருஷ்ட ஜன்மத்திற்கு இரண்டு தோஷமுமில்லை. (24) நைச்சியம் ஜன்ம ஸித்தம்.

(25) ஆகையாலே உத்க்ருஷ்ட ஜன்மமே ஸ்ரேஷ்டம்.

தொடரும். இராகவராமாநுஜதாஸர்,
மதுரை.

இவ்வாக்யத்தால் ஜன்மாதியின் உயர்விலுள்ள பிரதிகூலத்தன்மை கூறப்பட்டது.

(23) முற்கூறிய தோஷங்கள் தாழ்ந்த ஜன்மாதிகளிலில்லையோ என்னும் சங்கையுண்டாக அதைப் பரிகரிக்கின்றார் "அபகிருஷ்டமாக ப்ரமித்த" வென்று தொடங்கி.

அபகிருஷ்டமாக ப்ரமித்தவென்றது உண்மையில் தாழ்வில்லாததைத் தாழ்வாக மயங்கின என்றவாறு. மயக்கத்தின் பொருள் முன்னுரைக்கப்பட்டது. உத்க்ருஷ்ட ஜன்மத்திற்கு என்றது உயர்ந்த ஜன்மத்திற் கென்றவாறு. இரண்டு தோஷமும் இல்லை என்றது உபாயாந்தராநுஷ்டானத்திற்கு யோக்யதையுடைமையால் வருகின்ற பயகாரணத்வமும், ஸ்வரூப ப்ராப்த நைச்சியம் பாவிக்கவேண்டுகையாகிற இரண்டு தோஷங்களும் இல்லை என்றவாறு. அஃதாவது ஜன்மாதி உத்க்ருஷ்டத்தால் வரும் அஹங்காரத்திற்குக் காரணமாகாமல் ஆத்மஸ்வரூபமான பாகவத சேஷத்வத்திற்கு அநுகூலமாயிருக்கின்ற உயர்ந்த ஜன்மத்திற்கு இரண்டு தோஷங்களுமில்லை யென்பதாம்.

ஜன்மாதிகளால் இழிந்தவர்கட்கு உயர்ந்த ஜன்மாதிகளில்லாமையால் உபாயாந்தராநுஷ்டானத்திற்குரிய யோக்யதையன்றோ இல்லாதது அவர்களும் நைசசியம் பாவிக்கவேணடாமோ என்றும் சங்கையுண்டாக அதற்குச் சமாதானமருளிச்செய்கின்றார் நைசசியம் ஜன்ம ஸித்தம் என்று.

(24) நைச்சியம் ஜன்ம ஸித்தம் என்றது நைச்சியம் ஜன்மததோடுகூடியது என்றவாறு. அஃதாவது பாகவத சேஷத்வத்திற்குக் காரணமான தாழ்வு உடன்பிறந்திருக்கையாலே இவர்கள் பிறர் செய்வது கண்டு கற்கவேண்டாமென்பதாம்.

(25) இதுவரை ஆக்ஷேபணை சமாதானங்களோடு விரிவாகக்கூறிய வர்த்தத்தைச்சுருக்கி அருளிச்செய்கின்றார் "ஆகையாலே"என்று தொடங்கி.

ஆகையாலே என்றது உத்க்ருஷ்ட ஜன்மாதிகள் உபாயாந்தராநுஷ்டான மூலமாயும், பாகவதாபசார மூலமாயும், பகவத்ப்ராப்திக்கு விரோதியாயிருப்பதாலும் அபக்ருஷ்ட ஜன்மாதிகளில் முற்கூறிய தோஷங்களில்லாமையால் பகவத் ப்ராப்திக்கு அநுகூலமாயிருப்பதாலும் என்றவாறு. உத்க்ருஷ்ட ஜன்மமே என்றது பகவத் சேஷத்வத்தின் எல்லையாகிய பாகவதசேஷத்வத்திற்கு அநுகூலமாயிருக்கையால் அதனால் மிகவும் உயர்வாயிருக்கின்ற இந்த ஜன்மமே என்றவாறு. ஸ்ரேஷ்டம் என்றது. உயர்ந்தது என்றவாறு. அஃதாவது பகவத் சேஷத்வத்திற்கும் பிரதிபந்தகமான ஜன்மத்தைக்காட்டிலும் அதற்கு அநுகூலமாயிருக்கின்ற தாழ்ந்தஜன்மமே மிகவும் உயர்ந்ததென்பதாம்.

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(152-ம் பக்கத்தொடர்ச்சி.)

கூ-ம் திருவாய்மொழி—இவையும்.

சூ-ம். பாட்டு—மாபன்.

(22) உகவாதார்க்கு சம்சயவிபர்யங்களைப் பிறப்பிக்கும் என்பதற்கு அரும்பதத்திற்கண்ட வரலாறு வருமாறு.— பட்டர் திருவோலக்கத்திற்குப் பலகாலும் சாஸ்திரியாயிருப்பானொரு ப்ராம்மணன் சென்றுடியிருப்பானாய், அவனைக்கண்டால் பட்டரும், 'வந்தாயோ, போனாயோ' என்று சாமாந்யேந வ்யவஹரித்தருளிச் செய்வர்; ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பலகாலும் ஸேவிக்க எழுந்தருள்வர், அவரைக்கண்டால் மிகவும் கிருபைசெய்து ஆதரித்துக்கொண்டெழுந்தருளியிருப்பர்; இதனைப் பலகாலும் கண்டிருப்பாரொருவர் பட்டரைவந்து சேவித்து, 'ஸ்வாமீ! தேவரீர் திருவோலக்கத்துக்கு வருகிற சாஸ்திரி, ப்ரஸித்தனாயிருக்கிறவன்; அவன்வந்தால் சாமான்யமாக வ்யவஹரித்தருளுகிறது; ஒரு சாது ஸ்ரீவைஷ்ணவர் வந்தாரென்றால் அவரை மிகவும் ப்ரதிபத்திபண்ணியருளுகிறது; 'இஃதிரண்டையும் எனக்கு அருளிச்செய்யவேண்டும்' என்ன, 'ஆனால் அவர்களிரண்டுபேரு மெப்போதும்போலே நாளையும் வருவர்; அப்போது நீயுமெப்போதும்போலே பார்த்திரு; இரண்டுஞ் சொல்லுகிறோம்' என்ன, அவருமப்படியே பார்த்திருக்க, மற்றைநாள் விடிவோரையில் அந்த பராம்மணன் ப்ரதமம்வந்து ஸேவிக்க, அவனை எப்போதும்போலே வினவியருளி, நீராரைத்தான் பரத்வம்

(22) எம்பெருமான் தன்னை யடைந்தவர்கட்கு நல்லுணர்வையும், அடையாது விலகிநின்றார்கட்கு விபரீத வுணர்ச்சியையுஞ் செய்வானென்பதை இவ்வரலாற்றாலறியலாம். இஃதன்றி, ஒருவர்க்குச் சாஸ்திரத்தாலுண்டாகின்ற அறிவால் நிச்சயஞ்ஞானமுண்டாவதரிதென்பதும், உபதேசத்தாற் பிறக்கின்ற அறிவினால் நிச்சயஞ்ஞானமுண்டாவ தெளிதென்பதும் விளங்குகின்றன.

என்று நினைத்திருக்கிறது' என்ன, 'சில ப்ரமாணங்கள் பிர்ம்மாவை பரத்வம் என்று சொல்லுகின்றன; சில ப்ரமாணங்கள் ருத்திரனை பரத்வம் என்று சொல்லுகின்றன; ஆகையாலே நம்மால் நிச்சயிக்கப்போமோ'' என்ன, 'நல்லது' என்றிருந்து அவன் போனவாறே ஸ்ரீவைஷ்ணவா எழுந்தருளி ஸேவிக்க, அவ்ரையும் க்ருபைபண்ணியருளி, 'தேவரீர் ஆரைத்தான் பரதத்வம் என்றிருப்பீர்' என்ன; 'தேவரீர் ஸ்ரீய:பதி நாராயணன் என்றருளிச்செய்யுமே; அஃதொழிய அடியேன் வேறொன்றறியேன்' என்ன, 'இன்னமும் உமக்குத் தஞ்சமாக நினைத்திருப்பதேது' என்ன, 'எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயம் என்று ப்ரசாதித்தருளுமே, அதையே தஞ்சமாக நினைத்திருப்பேன்' என்ன, திருவுள்ளமுகந்து 'அபசாரத்தை க்ஷமித்தருள்க; திருமாளிகைக்கு எழுந்தருள்க' என்றருளிச்செய்து, பார்த்திருந்தவரைப்பார்த்து, 'கண்டீரே இருவருக்குமுண்டான தாரதம்மியம்; ஆகையாலே இவரை வணங்கவோ? அவனை வணங்கவோ? இப்படியன்றோ ஸ்வரூபஸ்திதியிருப்பது' என்றருளிச்செய்ய, அவரும் க்ருதார்த்தராய்ப் போனார்'' என்பதாம்.

. ௰-ம். திருவாய்மொழி—பொருமாநீள்படை.

உ-ம். பாட்டு—கண்ணுள்ளே நிற்கும்.

(23) வேல்வெட்டிநம்பியார் நம்பிள்ளையை 'பெருமாள்கடலைச் சரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி நியமங்களோடே சர

(23) ஒருவன் - இருபத்துநான்கு இருபத்தைந்து இருபத்தாறு என்றுவது குடம்படம் (வஸ்திரம்) ஈசுவரன் என்றுவது எண்ணினால் அவனை ஸர்வேசுவரன நம்முடைய உணமைக்கிசைந்து பிறபொருள்களை எண்ணுகின்ற பொழுதேனும் நம்மை நினைத்தான்'என்று அவனுக்கருள்செய்யும் இயல்பினனாகவிருக்கிறான். இவன் இங்ஙனமிருக்கின்றபோது இனி நாம் நம் பேற்றுக்கு ஒரு பிரயத்னமுஞ்செய்யவேண்டாம்; அவன் நம்மைக்காக்கின்றேன்

* இருபத்து நான்காவது தத்துவம் பிரகிருதி; இருபத்தைந்தாவது தத்துவம் ஆத்மா; இருபத்தாறுவது தத்துவம் ஈசுவரன்; என்ற இம்முறைகளை யாதாயாமல் ஒருவன் இருபத்தாறு என்று எண்ணினாலும் ஸர்வேசுவரன் அருளினால் தன்னையே எண்ணியதாகக் கருதுகிறான்.

ணம் புக்கராயிருந்தது இவ்வுபாயம் இதரஸாதனங்கள் போலே சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ' என்று கேட்க, பெருமாள் தமக்கு "𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂 𑌰𑌾𑌘𑌵𑍋𑌰𑌾𑌜𑌾 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌨𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿" "ஸமுத்ரம் ராகவோராஜா சரணம் கந்துமர்ஹதி" என்று உபதேசித்தான் ஸ்ரீவிபீஷணாழ்வான். அவன்றான் பெருமாளைச் சரணம் புகுகிறவிடத்தில் 'கடலிலே ஒரு முழுக்கிட்டு வந்தான்' என்றில்லை.

என்றபோது 'வேண்டாம்' என்று தடைசெய்யாதிருக்கின்ற இவ்வொன்றே போதுமானது என்ற விஷயத்தைக்குறித்து ஆழ்வார் "எண்ணிலும் வரும் என்னினிவேண்டுவம்" என்றவிடத்தில் இவ்வாறருளிச்செய்யப்பெற்றுளது.

வேல்வெட்டி நம்பியார் பாஞ்சராத்திர சாஸ்திரத்தைத் தெள்ளிதினுணர்ந்தவர். அந்த ஆகமத்தில் "𑌨 𑌜𑌾𑌤𑌿𑌭𑍇𑌦𑌂 𑌨 𑌕𑍁𑌲𑌂 𑌨 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌨 𑌗𑍁𑌣𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃, 𑌨 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑍌 𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌂 𑌯𑍋𑌗𑍋 𑌹𑍍𑌯𑌯𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍇" "நஜாதி பேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா:, நதேசகாலௌ நாவஸ்தாம் யோகோஹ்யயமபேக்ஷதே" என்றபடி ப்ரபத்திக்கு உயர்பிறப்பு நற்குலம் நல்லொழுக்கம் நரையின்மையின்மை முதலிய அடையாளம், க்ஷேத்திரவாஸம் தூய்மையாயிருத்தல் என்ற நியமங்கள் வேண்டாமென்று சொல்லப்பட்டுளது. இதற்கு விரோதமாக வேல்வெட்டி நம்பியார் ஸ்ரீராமாயணத்தை அநுஸந்தித்து வருகிறபோது அதில் ஸ்ரீராமபிரான் கிழக்குமுகமாகவிருந்துகொண்டு சமுத்திரத்தைச சரண்புகுந்தனர் என்றிருப்பதைக்கண்டு பிரபத்திக்கும் ஏதேனும் நியமம் வேண்டுமோ என்று சந்தேகங்கொண்டு 'இதை எவரிடத்திற் கேட்டுத்தெளிவது, என்று நெடுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஒருநாள் நஞ்சீயரும் நம்பிள்ளையும் ஒருகாரிய நிமித்தமாக வேல்வெட்டிக்கு எழுந்தருளினர்; வேல்வெட்டி நம்பியார் நம்பிள்ளையைநோக்கி இதனை வினவினர்.

வேல்வெட்டி—ஒரூர். பெருமாள்—ஸ்ரீராமபிரான். பிராங்முகத்வாதி நியமம்—கிழக்குமுகமாயிருந்துகொண்டு ஸங்கல்பபூர்வகமாகச்செய்யும்நியமம். இவ்வுபாயம்—ப்ரபத்தியாகிய உபாயம். இதர ஸாதனங்கள்—கர்மம் ஞானம் பக்திகள். ராஜா—இராஜாவாகிய, ராகவ—இராமபிரான், ஸமுத்ரம்—ஸமுத்திரத்தை, சரணம்கந்து—சரணமாகவடைவதற்கு, அர்ஹதி—தகுந்தவர். ஆகையால் ஸர்வாதிகாரம் இவ்வுபாயம் என்றது இக்ஷ்வாகு குலத்தில் அவதரித்த ஸ்ரீராமபிரானும், இராக்ஷஸகுலத்திற்பிறந்த ஸ்ரீவிபீஷணாழ்வானும் சரணாகதியை அநுஷ்டித்திருக்கின்றார்களாதலால் பிரபத்தி செய்தற்கு எல்லோரும் அதிகாரிகள் என்றவாறு.

ஆக, இத்தால் சொல்லிற்றாயிற்றென்னையென்னில்; பெருமாள் இக்ஷ்வாகு வம்சியராய் ஆசாரப்ரதாநராகையாலே சில நியமங்களோடே சரணம் புக்கார்''. இவன் ராக்ஷஸஜாதீயனாகையாலே அவன் நின்ற நிலையிலே சரணம் புக்கான். ஆகையாலே யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்க வேண்டா; அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; ஆகையாலே ஸர்வாதிகாரம் இவ்வுபாயம் என்று அருளிச்செய்தார்.

உ-ம் பத்து.

ரு-ம். திருவாய்மொழி—ஊனில்வாழ்.

உ-ம். பாட்டு—ஒத்தார்.

(24) இப்பாட்டு ப்ரஸ்துதமானவளவிலே எம்பார் கோஷ்டியிலே 'இவ்வாத்மாவுக்கு ப்ரதமகுருவார்' என்று பிறந்ததாய், இருந்த முதலிகளிற் சிலர், 'ஆசார்யனன்றோ' என்றார்கள்; சிலர் 'ஆசார்யன் ஸ்ரீபாதத்திலே ஆசிரயிக்கப்போரு' என்று அழைத்துக்கொண்டுபோய்ச் சேரவிட்ட ஸ்ரீவைஷ்ணவன் ப்ரதமகுரு என்றார்கள் 'அங்ஙனமன்றுகாண்; அவன் இவனை யழைத்தாலும் இவன் அல்லேன் என்னாதபடி 'இசைவித்தென்னை' என்கிறபடியே அகவாயிலே, இருந்திசைவித்த ஸர்வேசுவரன் காண் ப்ரதமகுரு' என்றருளிச்செய்தார்.

---

(24) இப்பாட்டு ப்ரஸ்துதமானவளவிலே என்றது இந்த "ஒத்தாரை மிக்காரையிலே" என்ற பாட்டிற்கு வியாக்யானம் பிரஸ்தாபிக்கப்பட்டகாலத்திலே என்றவாறு. இவ்வாத்மாவுக்கு ப்ரதமகுருவார் என்று பிறந்ததாய் என்றது இவ்வாத்மாக்களுக்கு முதல் குரு யாவன் என்ற வினாவுண்டாக என்றவாறு. இப்பாட்டில் "அறியாதனவறிவித்தவத்தாய்" என்று ஆசார்ய கிருத்யத்தையும் எம்பெருமானே செய்தானென்று அருளிச்செய்திருப்பதால் இந்த வினாவெழுந்தது. எம்பார் கோஷ்டியிற் கூடியிருந்த சில ஸ்ரீவைஷ்ணவர்கள் மந்திரோபதேசஞ்செய்த ஆசார்யனே முதற்குருவாவான் என்றுரைத்தார்கள். வேறு சிலர் ஒருவனை ஆசார்யனிடத்திற்கொண்டுபோய்ச் சேர்க்கிற பாகவதனே முதற்குருவாவான் என்றனர். இவற்றைக் கேட்ட எம்பார் ஸர்வேசுவரனே ப்ரதம குருவாவானென்றருளிச்செய்தார். இங்ஙனமருளிச்செய்ததை நிரூபிக்கிறார் 'இவனவனை' என்று தொடங்கப்பெற்ற வாக்யங்களால். அவனென்றது ஸ்ரீவைஷ்ணவனை. இவன் என்றது உபதேசங்கேட்ப

(25) ஆளந்தாருக்குக் குருகைகாவலப்பன் அருளிச்செய்ததாக அருளிச்செய்யும் வார்த்தை—'அப்பன் ஸ்ரீபாதத்திலே ஒரு ரஹஸ்ய விசேஷமுண்டு' என்று மணக்கால்நம்பி அருளிச்செய்ய, 'அதுகேட்கவேண்டும்' என்று ஆளந்தவந்தாருமெழுந்தருள, கங்கைகொண்ட சோழபுரத்தேற, அப்பனுமங்கே ஒரு குட்டிச்சுவரிலே, யோகத்திலே எழுந்தருளியிருக்க, 'இவரை ஸமாதி பங்கம் பண்ணவொண்ணாது' என்று சுவருக்குப்புறம்பே பின்னேநிற்க, அப்பனும் யோகத்திலே எழுந்தருளியிருக்கிறவர் திரும்பிப்பார்த்து 'இங்குச் சொட்டைக்குலத்தாராரேனும் வந்தாருண்டோ' என்று கேட்டருள 'அடியேன்' என்று ஆளவந்தாரும் எழுந்தருளிவந்து கண்டு, 'நாங்கள் பின்னே தெரியாதபடி நிற்க இங்ஙனம அருளிச்செய்கைக்கு ஹேதுவென்' என்ன, 'நாலும் தானுமாக அநுபவியா நின்றால்

தற்கிசைந்தவனே. "இசைவித்தென்னை உன்றாளிணைக்கீழிருத்துமம்மானே" என்பது திருவாய்மொழியிற்கண்ட மேற்கோள். இதன் பொருளாவது — நீண்டகாலமாக மாறுபாடுற்ற சிந்தையனாகிய என்னை இசையும்படி செய்து உன்திருவடிகளிற் சேர்த்த மஹோபகாரனாகிய இறைவனே என்பதாம். அக வாயிலே இருந்திசைவித்த என்றது அந்தர்யாமியாயிருந்து ஸத்வகுணத்தைப் பிறப்பித்து மனமிசையும்படிசெய்த என்றவாறு. அநாதிகாலம் துர்வாஸனையிற் பழகித்திரிகிற ஒருவனை ஸர்வேசுவரன் அந்தர்யாமியாயிருந்து அவன் மனத்தை இசைவியாதபோது ஓர் பாகவதன் ஹிதோபதேசத்தைக்கேட்க மாட்டான். அங்ஙனம் கேட்காதபோது அவன் ஆசார்யனையணுகான். அவன் பாற் செல்லாதபோது மந்திரோபதேசஞ்செய்யான். ஆக ஆசார்யன் மந்திரோபதேசஞ் செய்வதற்கு ஸர்வேசுவரன் அந்தர்யாமியாயிருந்து இவன் மனத்தை இசைவிப்பதே முக்யகாரணமாயிருப்பதால் ஸர்வேசுவரனே ப்ரதமகுருவாவானென்பது தெளிவு.

(25) ஆழ்வார், எம்பெருமான் தம்மோடு கூடியிருந்து வேறுபராக்கில்லாதிருக்கின்றான் என்பதைக்குறித்து "எங்கும் பக்கம் நோக்கறியானென்பைந்தாமரைக்கண்ணனே" என்றருளிசெய்கிறவிடத்தில் இவ்வரலாறுரைக்கப் பட்டுளது. இவ்வரலாற்றால் யோகஸமாதியிலிருப்பவர்கள் இருதயத்தில் எம்பெருமான் ஆவிர்ப்பவித்து அவர்களுடைய ஞானக்கண்ணிற் இலக்காவானென்பதும். அவர்கள் கண்டு அவனோடு அளவளாவி மகிழ்வெய்துவார்களென்பதும் விளங்குகின்றன. இந்த யோகமுறை, பகவத் திருவுள்ள மில்லாததினால் பின்னுள்ளாரளவிலும் வாராமல் குருகைகாவலப்பன் அளவில் நின்று விட்டது.

பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைத்தாலும் அவள் முகம்பாராத ஸர்வேசுவரன் என் கழுத்தை அமுக்கி நாலு மூன்றுதரமங்கே எட்டிப்பார்த்தான்; , இப்படியவன் பார்க்கும்போது சொட்டைக்குடியிலே சிலர் வந்தாருண்டாக வேணும்' என்றிருந்தேன் காணும் என்று அருளிசசெய்தார்.

௨-ம். திருவாய்மொழி—அணைவதரவணை.

ப்ரவேசம்.

(26) ஆழ்வார் தம்முடைய ஸம்பந்தமுடையவர்களையும் எம்பெருமான் அங்கீகரிப்பதாகத் திருவுள்ளம்பற்றியதாயறிந்து, 'இனி ஸம்ஸாரிகட்கும் நம்முடைய ஸம்பந்தத்தையுண்டாக்கி அவன் கிருபைக்கு விஷயமாக்குவோம்' என்றவிடத்தில் அரும்பதத்தில் ஒரு வரலாறுரைக்கப்பெற்றுளது. அதுவருமாறு.— பிள்ளைலோகாசார்யர், 'ஆய்க்குடி என்கிற கிராமத்தில் பெருமாள் பறிகொடுத்தார்' என்று கேட்டுத் தாமும் பறிகொடுத்தார். அதைக் கேட்டருளிய பெருமாள் அத்யந்தம் ப்ரீதராய்ப் பிள்ளைலோகாசார்யரைப்பார்த்து 'உமக்கும் உம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகட்கும் மோக்ஷம் தந்தோம்' என்று திருவுள்ளம்பற்ற அநந்தரம் பிள்ளைலோகாசார்யர், * "𑌯𑌂𑌯𑌂 𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑌿 𑌪𑌾𑌣𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌂𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾, 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾 𑌜𑌨𑌾𑌃", "யம்யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம்யம் பச்யதி சக்ஷுஷா, ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம்புநர்பாந்தவாஜநா:" என்கிற கணக்கிலே தம்முடைய பரமகிருபையாலே எறும்பு முதலானவற்றைப் பரிசிப்பது; ஸ்தாவராதிகளைக் கடாக்ஷிப்பது முதலான கிருபாகார்யமான செயல்களைச்செய்து எல்லாவற்றிற்கும் ஸம்பந்தத்தையுண்டாக்கியருளினார்" என்பதாம்.

---

(26) * யம்யம்-எதையெதை, பாணிப்யாம்-கைகளால், ஸ்ப்ருசதி-தொடுகிறாரோ, யம்யம்-எதையெதை, சக்ஷுஷா-கண்களாலே, பச்யதி-பார்க்கிறாரோ, ஸ்தாவராணிஅபி-அவை மர முதலிய பொருள்களாயிருந்தபோதிலும், முச்யந்தே-மோக்ஷமடைகின்றன; பாந்தவாஜநா-பந்துஜனங்கள்விஷயத்தில், கிம்புந:-சொல்லவேண்டியதென்ன? என்பதாம்.

கூ-ம். திருவாய்மொழி—எம்மாவீடு.

உ-ம். பாட்டு—ஈதே.

(27) இங்கே, எம்பாருக்கு ஆண்டான் அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அஸ்தாவது.— ஒருகால் முதலியாண்டான் திருநாராயணபுரத்திலே எழுந்தருளியிராநிற்கச் செய்தே, அவருடைய ஸ்ரீபாதத்திலொரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலிலே வந்து எம்பார் ஸந்நிதியிலேயிருக்க, அப்போது எம்பார் 'உமக்கு விசேஷ ஸம்பந்தமுண்டோ' என்று அந்த ஸ்ரீவைஷ்ணவரைக் கேட்க,

---

(27) நசிகேதஸ் என்பவன் யமன் வீட்டையடைந்திருந்தபோது இவன் அங்கு மூன்றுதினம் பட்டினிகிடந்தமையைக்கேட்டுஅச்சமுற்றயமன் இவன் பட்டினி கிடத்தலினால் தனக்குண்டாகிய தோஷத்தினின்றும் கடப்பதற்காக நசிகேதஸ்ஸை நோக்கி அப்பா! உனக்கு மூன்று வரங்கள் கொடுக்க விரும்புகிறேன்; கேட்பாயாக என்றான். நசிகேதஸ், இனி என் தகப்பனுக்கு என்விஷயத்தில் கோபம்வராதிருத்தல்வேண்டுமென்பது ஒன்று. அக்கினி வித்தையை உபதேசிக்கவேண்டுமென்பது மற்றொன்று. மோக்ஷத்தையடைதற்குரிய ஆத்மாவின் ஸ்வரூபவியல்புகளை யுபதேசிக்க வேண்டுமென்பது பிறிதொன்றாம். ஆக, இந்த மூன்று வரங்களையும் ஈந்தருளவேண்டுமென்றுகேட்டான். அப்பொழுது யமதருமன் 'இவன் இப்பொழுது மூன்றாவதாகக்கேட்ட வரம் ஸாமாந்யமானதன்றே; அதை உத்தமாதிகாரிக்கன்றோ உபதேசிக்கவேண்டும்; இவன் அவ்வுபதேசத்தைப் பெறுவதற்குப் பக்குவமுடையவனாக விருக்கின்றானென்பதைப் பரிசோதிக்கவேண்டும்' என்ற கருத்துடன் நசிகேதஸ்ஸைநோக்கி அப்பா! நீ கேட்டவரங்களில் மூன்றாவது வரம் நீங்கலாக மற்ற இரண்டு வரங்களையும் தந்தேன்; அந்த மூன்வது வரத்திற்குப்பதிலாக வேறு ஏதேனுங்கேட்பாய்; ஸ்வர்க்கலோகஞ்சென்று ஊர்வசி முதலிய தேவமாதர்களோடு சுகித்திருக்கக் கருதுவையேல் அவ்வரத்தைத் தருகிறேன்; என்று பலவாறாகப் பரிசோதனைசெய்தான். அதற்கு நசிகேதஸ் கலங்காத மனத்தையுடையவனாய் முன்கேட்டபடியே பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷோபாயத்தையே உபதேசிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டான். அதுபோல ஆழ்வாரும் எம்பெருமான் உகந்த கைங்கர்யமே பரமபுருஷார்த்தம் என்று நிஷ்கர்ஷித்திருந்தபோது எம்பெருமான் ஆழ்வாரைப் பரிசோதிப்பதற்கு உமக்கு 'எம்மாவீட்டைத்தருகிறோம்' என்றான். ஆழ்வார் அது வேண்டாம்; "ஈதேயானுன்னைக் கொள்வதெஞ்ஞான்றும்" என்று பிரார்த்தித்தார். இவ்விடத்தில் "ஞானக்கைதா"என்று சொல்லப்பட்டுள்ளது. ஞானத்தைக் கையாகச் சொல்லப்பட்டதற்கேற்ப இவ்வரலாறுரைக்கப்பெற்றது.

அவரும் 'தேவரீருடைய ஸம்பந்தமே ஸம்பந்தம்' என்று விண்ணப்பஞ்செய்ய, அவ்வளவிலே எம்பாரும் 'இவர் ஆண்டான் ஸ்ரீபாதஸம்பந்தமுடையார்' என்றறியாதே இவருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப்பண்ணி இவரைக்கொண்டு கைங்கர்யங்கொண் டெழுந்தருளியிராநிற்கச்செய்தே, ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே எழுந்தருள, அவ்வளவிலே அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆண்டானை வந்து ஸேவிக்க, ஆண்டானும் முன்புபோலே இவரைக்கொண்டு வேண்டுங் கைங்கர்யங்களைக்கொள்ள, அப்போது எம்பாருமறிந்து ஆண்டான் பக்கலிலே எழுந்தருளி 'கனக்க அபசாரப்பட்டேன்' என்றருளிச்செய்ய, அப்போது ஆண்டான் 'ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டு பேர் கைகொடுத்தால் எடுக்குமவர்கட்கு மெளிதாய் ஏறுமவனுக்கு மெளிதாயிருக்குமிறே; அப்படியே யாகிறது' என்றருளிச்செய்தார்; என்பதாம்.

ய-ம். திருவாய்மொழி.

அ-ம். பாட்டு —வலஞ்செய்து.

(28) "பிள்ளைத் திருநறையூரரையரும், பட்டரும் ப்ரதக்ஷிணம் பண்ணாநிற்கப் பின்னே ஸேவித்துக்கொண்டு போனேன்; அல்லாதார் கடுங்குதிரைபோலே வராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும், திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப் போலே பார்த்துக்கொண்டு வந்தார்கள்" என்று நஞ்சீயரருளிச் செய்வர்.

தொடரும்.

ப. அ.

(28) "வலஞ்செய்து நாளும்மருவுதல் வழக்கே" என்றவிடத்தில் வலஞ்செய்தல் உபாயாநுஷ்டானத்திற் சாராதோ என்று சங்கையுண்டாக, அதற்குச சமாதானமாக இவ்வரலாறுரைக்கப்பெற்றுளது. மிகுதியாகப் பிரதக்ஷிணஞ்செய்தால் பலஸித்தியுண்டாகுமென்ற அபிப்பிராயத்தால் சிலர் கடுங்குதிரை போலே நடந்து பிரதக்ஷிணஞ் செய்தார்கள். இவர்கள் பிரதக்ஷிணத்தைப் பலஸித்திக்கு உபாயமாகக் கருதினார்களென்பது விளங்கும். திருநறையூரரையரும். பட்டரும் திருமாளிகைகளையும், திருககோபுரஙகளையும் கணணாலே பருகிககொணடு பிரதக்ஷிணஞ் செய்தார்கள் என்றதனால் இவர்கள் பிரதக்ஷிணஞ்செய்தலையே பலமாகக கருதினார்களென்பது தெளிவு. இதனால் ஒரு விஷயமே அதிகாராநு குணமாக வேறுபட்டிருக்குமென்றறியத்தக்கது.